# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 சிலை 11 (26 - 12 - 1982) விலை 65 காசு | இதழ் எண் : 8 | பகுதி 8

# ★ தமிழகத்தில் உள்ள ★ தமிழீழ விடுதலைப் புலிகளின் அவலவாழ்க்கை!

## ★ அறமன்ற நடவடிக்கையில் காலத்தாழ்த்தம் ஏன் ? ★

## ★ அவர்களின் பிணையல் கட்டுப்பாட்டைத் தளர்த்துக ! ★

## ★ அவர்களின் வழக்குகளைத் தள்ளுபடி செய்து அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குக !

### மாநில, நடுவண் அரசுக்கு உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு வேண்டுகோள் !

சென்னை-25: கடந்த 19-5-82 - ஆம் நாளன்று சென்னையில் நடந்த ஒரு சச்சரவில் பிடிபட்டு... சில மாதங்கள் சிறையில் இருந்து கடந்த 6-8-82 அன்று பிணையலில் விடுவிக்கப் பெற்ற, தமிழீழ விடுதலைப் புலிகளான பிரபாகரன் என்ற கரிகாலன், சிவகுமார் என்ற இராகவன், உமாமகேசுவரன் என்ற முகுந்தன், சோதீசுவரன் என்ற கண்ணன், சிவனேசுவரன் என்ற நிரஞ்சன், முறையே மதுரையிலும், புதுக்கோட்டையிலும், சென்னையிலும், வேலூரிலும் (வ. ஆ.), திருச்சியிலுமாக இருந்து வருவது அனைவரும் அறிந்ததே.

அவர்கள்மேல் அரசு தனித் தனியான வழக்குகளைப் போட்டுள்ளது. அவர்கள் இதுவரை மூன்று நான்கு முறை வழக்கு மன்றத்துக்கு அழைத்து வரப்படுவதும் பிறகு வழக்கு தள்ளி வைக்கப்படுவதுமாக, பிணையல் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறார்கள்.

அவர்கள், ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட ஊர்களிலேயே, அதுவும் அவ்வந் நகர்களிலேயே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் பகலில் ஆறு காவலர்களும் இரவில் ஆறு காவலர்களும் தீவிரமாகக் கண்காணித்து, அவ்வப்பொழுது மாநில அரசுக்கும் நடுவண் அரசுக்கும், காவல் துறைக்கும் அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான முறையில் கண்காணிக்கப்படாமல், காவலர்களின் மன நிலைக்கும், நடைமுறைகளுக்கும் ஏற்ப; கடுமையாகவும், கட்டுப்பாடாகவும் நடத்தப் படுவதாகத் தெரிய வருகிறது.

பிணையல் முறைப்படி, விடுதலைப் புலிகளுக்குப் பாதுகாவலாகக் காவலர்கள், அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்பது நெறி. ஆனால், காவலர்கள் அவர்களை அளவுக்கு மீறிக் கட்டுப்பாடு செய்வதாகவும், அவர்களின் அன்றாட வாழ்வு நடைமுறைகளில் குறுக்கீடு செய்வதாகவும் தெரிகிறது. ஓரிரு இளைஞர்களிடம் மிகவும் கடுமையாகவும் காவலர்கள் நடந்து கொள்வதாகத் தெரிந்து மிகவும் வருந்துகிறோம்.

அவர்கள், நம் நாட்டு அரசியல் சட்டப்படி, குமுகாயக் குற்றவாளிகள் அல்லர்; அரசியல் குற்றவாளிகளாக மதிக்கப்பட வேண்டியவர்கள். இன்னுஞ் சொன்னால் அவர்கள் ஒரு நாட்டின் விடுதலை மறவர்கள். ஊதியங் கருதும் அரசியல்காரர்களை விட, நிலையான நாட்டு விடுதலைக்குப் போராடும் வீரர்கள்; தங்கள் வாழ்வையே மக்களின், நாட்டின் நலன்களுக்காக ஒப்படைத்துக் கொண்டு, உயிர்ப் போராட்டம் நடத்தும் அப்பழுக்கற்ற ஈகிகள் (தியாகிகள்)!

ஒரு காவலர் கைகளில் ஒருவர், ஏதோ ஒருவகையில் ஒப்படைக்கப் பட்டுவிட்டால் அவர் எவ்வளவு பெரிய அறிஞராயினும், தகுதி வாய்ந்தவராயினும், தலைவராயினும் அவரை ஏதோ ஒரு குற்றவாளியைப் போலவும், திருடரைப் போலவும், கொள்ளையரைப் போலவும், கொலையாளியைப் போலவும் எண்ணிக் காவலர்கள் நடந்து கொள்வது முறையன்று. அறமும் அன்று! ஒரு கடுங்குற்றவாளியும் மாந்தத் தன்மையுடனும், மாந்த நேயத்துடனும் (மனிதாபிமானத்துடனும்) நடத்தப் பெற வேண்டிய அறிவியல், உரிமையியல் வளர்ச்சியுடைய இக்காலத்தில், ஒரு நாட்டுக் கொள்கைக்காகவும், உயர்ந்த உரிமை நோக்கத்திற்காகவும் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளைக் காவலர்கள் அன்பாகவும் மதிப்பாகவும் நடத்தும்படிக் கேட்டுக் கொள்கிறோம். பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அராபத்துக்கு, ஒரு குடியரசுத் தலைவரைப் போலும் வரவேற்பும் வாழ்த்தும், ஆதரவும், அன்பளிப்பும் கொடுக்கும் நம் தலைமையமைச்சரின் நடவடிக்கை அவருக்கு மட்டுமே சொந்தமானதன்று; அது தனிப்பட்ட ஒருவரின் செய்தியாகக் கருதப்பட வேண்டியதுமன்று. இந்த நாட்டில் உள்ள அனைத்து அதிகார நடைமுறைக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டுவது.

விடுதலைப் புலிகள்; அங்கங்குத் தனித் தனித் தங்கும் விடுதிகளிலேயே தங்கியுள்ளனர். அவர்கள் தங்கள் தங்கள் பொறுப்பிலேயே உணவு, உடை, உறையுள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். அரசுப் பொறுப்பில் அன்று. பிணையலில் வெளிவந்த நாள் லிருந்து அவர்களைக் காவல் செய்யும் காவலர்களுக்கு ஆகும் செலவும் நூற்றில் ஒரு பங்கு தானும் அவர்களுக்காகச் செலவிடப்படுவதில்லை. இவ்வாறிருக்க அவர்கள் தங்குமிடங்களுக்குக் காவலர்கள் ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை போய் வருவதும், சிலர் அவர்களின் அறைக்கு முன்பாகவே படுக்கை போட்டுக் கண்காணிப்பதும், அவர்கள் உணவுக் கடைக்குச் சென்றாலும், நூலகத்திற்குச் சென்று

(3-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், மெய்யறிவு ஆகிய எழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம் உ. த. மு. க

# ★ இப்பொழுது உண்மையான தமிழனாக எவன் இருக்கிறான்?

# ★ நாம் தாம் நம்மைத் தமிழன் என்றே சொல்வதில்லையே! சாதிப் பெயரைத்தானே சொல்கிறோம்!

## ★ கட்சி, மதவேறுபாடுகளும், கடவுள் கொள்கையும் நம்மை வேறுபிரிக்கக் கூடாது!

## ★ எவன் தமிழ்மொழிப்பற்றும் தமிழினப்பற்றும் தமிழ்நாட்டுப்பற்றும் கொண்டிருக்கிறானே அவனெல்லாம் தமிழனே!

## பாவலரேறு அவர்களின் சிறப்புரைத் தொடர்ச்சி-5

அடுத்து, இன்னொன்றையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் நன்றாக, ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய தமிழர்களில் பலர் பல மதங்களிலே இணைந்து கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். முதலிலே நமக்கென்று ஒரு மதம் என்பதை நாம் 'இந்து மதம்' என்று தவறாக நினைத்துக் கொண்டு, அல்லது தொடக்கத்திலே நாம் அதைத் தழுவிக் கொண்டு இருக்கிறோம். வழக்கத்திலும் கொண்டு வந்திருக்கிறோம். **நாம், இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதை முதலில் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்.** எதற்காக இந்துமதம் என்று நாம் சொல்ல வேண்டும். **"தமிழர் மதம்"** என்று வேண்டுமானால் சொல்லலாம். தமிழர்களுக்கென்று ஒரு மதம் இருக்கிறது. அஃதாவது, தொடக்கத்திலே தமிழ் நாட்டிலே தோன்றிய அந்த மதவுணர்வுகள், மதக் கருத்துக்கள், சமயக் கருத்துகளெல்லாம், தமிழர்களுடைய உண்மையான மெய்ப்பொருள் கருத்துகளை உட்கொண்டவை என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவற்றைத்தாம், தமிழர் மதம் என்று மறைமலையடிகளார் அவர்களும், பாவாணர் அவர்களும், சொன்னார்கள். சைவமும், மாலியமும் தமிழர் மதங்கள் என்று உறுதிப்படுத்தினார்கள். அந்த மதங்களை வேத மதங்களோடு உலரவிட்டு, இறுதியில் இந்து மதமாக அவர்கள் ஆக்கி, இந்தியாவில் இருக்கின்ற பௌத்தம், சமணம் என்கின்ற இரண்டு மதங்களையும் ஒழிப்பதற்காகச் செய்த முயற்சி தான் இந்து மதம் என்பது. எனவே நாம் இந்துமதம் என்று சொல்வதிலே கருத்துக் கூடாது. விருப்பங் கொள்ள கூடாது.

இன்னொரு நல்ல கருத்தையும் இங்கு சொல்ல விரும்புகின்றேன். மதத் தொடர்பாக வேறு கொள்கையுடையவர்களை, நாம் ஏதோ ஒரு நிலையிலே, அவர்களை வேறுபட்டவர்கள் என்று சொல்லுகின்ற உணர்ச்சியை நாம் கொள்ளக்கூடாது. அஃதாவது இறைவன், கடவுள், இருக்கின்றது - இல்லை, என்கின்ற வகையில் இனத்தைப் பிளவுபடுத்தக் கூடாது. அஃது ஒரு கருத்து. அந்தக் கருத்தைச் சிலர் விரும்பலாம். அல்லது விரும்பாமல் இருக்கலாம்! ஒரு கட்சி எப்படி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதும், திராவிடர் கழகம் என்பதும் எப்படி வேறுபட்ட இனத்தைச் சேர்ந்தவை இல்லையோ, அது போன்றது மத வேறுபாடுகளும் என்று நாம் நினைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

எடுத்துக் காட்டாக, தமிழர்கள் பலர், இசுலாம் மதத்தினராக மாற்றப்பட்டிருக்கிறார்கள்! தமிழர்களில் பலர் கிருத்துவர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். தமிழர்களிலே பலர் பௌத்தர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். தமிழர்களிலே பலர் சமணர்களாகவும் இருக்கிறார்கள். வேறு மதத்தையும் அவர்கள் தழுவுகிறார்கள். **மதம் என்பது ஒரு வழிபாட்டுக் கொள்கையை உடையது. ஒரு கடவுள் கொள்கையை உடையது. அது ஒரு கட்சி போன்றது.** அஃது ஓர் இனத்தை வேறுபடுத்திக் காட்டாது; வேறு ஒரு இனமாக மாற்றிவிட முடியாது. ஒரு தமிழன், பௌத்த மதத்திலே சேர்ந்து விடுவதினாலே, அவன் தமிழன் இல்லாதவனாக ஆகிவிட முடியாது. அவனும் தமிழன்தான்! அவனுடைய வழிபாட்டுக் கொள்கை, அது ஒரு வேறு வகையான கடவுள் கொள்கை! இந்து மதத்திலேகூட வேறு வகையான கடவுள் கொள்கையில்லையா? ஒருவர் சிவனை வழிபடுகிறார். இன்னொருவர் திருமாலை வழிபடுகிறார்! இன்னொருவர் மாரியை வழிபடுகிறார்! இப்படி ஏராளமான வேறுபாடுகள் இருக்கின்றனவே! இதைத் தான் ஆரியன் என்ன செய்தான்? இப்படி எந்த வகையான வேறுபாடுகளை அவன் கொண்டிருந்தாலும் கூட, அவன் "இந்து" நான் என்கின்ற கரவான ஒரு நெறியை எழுதி வைத்துக் கொண்டான்.

எனவே, இந்து என்று சொல்லுகின்ற பொழுது, அவன் எத்தகைய கடவுளை, எந்த வகையான கடவுளை, காட்டேறியைக் கும்பிட்டாலும் சரி, அல்லது காளியைக் கும்பிட்டாலும் சரி, மாரியைக் கும்பிட்டாலும் சரி, அவன் இந்து என்று ஏற்றுக் கொள்ளுகிறான். இப்படி ஏற்றுக் கொள்கின்ற ஓர் இணைவுதான், அந்த இந்து மதத்தை வலுப்படுத்தியது.

தமிழர் அடிமைப்பட்டதற்கு அடிப்படையான ஒரு கொள்கை இந்து மதம். எந்த வகையான ஒரு சிறு தெய்வக் கொள்கையாக இருந்தாலும் சரி, பெருந்தெய்வக் கொள்கையாக இருந்தாலும் சரி, அல்லது பேய்களை வணங்குகின்ற கொள்கையாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவன் சொன்னவுடனேயே—மக்கள் அறியாதவர்களாக இருந்தார்கள். மக்கள் எல்லாரும் நூற்றுக்கு நூறு அறிந்தவர்களா? அல்லது நூற்றுக்கு நூறு சிந்திக்கக் கூடியவர்களா? ஏதோ நூற்றுக்கு 15 பேர் அல்லது 20 பேர், நன்றாகக் கல்வி கற்றிருப்பார்கள்; மீதியெல்லாம் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பார்கள். அப்படி போனால், ஒரு 40, 45 விழுக்காடு தான் தேரும். 50 கூடத் தேராது. அதுவும் அந்தக் காலத்திலே எப்படி இருந்திருப்பார்கள்? அவர்களிடத்திலே இந்து மதத்தை வளர்க்க வேண்டுமானால், அவன் என்ன வேண்டுமானாலும் கும்பிட்டுக் கொள்ளலாம். எந்த வகையான நிலையிலும் சமயக் கொள்கைகளை அமைத்துக் கொள்ளலாம். அவனெல்லாம் இந்து என்று சொன்னான். எனவே இந்த நிலையில் நாம் தமிழின உணர்வு முன்னேற்றத்துக்குத் தடை இட வேண்டுமா?

**தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளுகின்ற உணர்ச்சி யாருக்கு இருக்கிறதோ, தமிழினம் முன்னேற வேண்டும் என்கின்ற உணர்வு யாருக்கு இருக்கிறதோ, தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்கின்ற உணர்வு யாருக்கு இருக்கிறதோ, அவர்களெல்லாரும் தமிழர்கள்.** அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இசுலாமியத் தமிழர்கள், கிருத்துவத் தமிழர்கள், பௌத்தத் தமிழர்கள்' சமணத் தமிழர்கள் என்று சொல்ல வேண்டும். அவர்கள் இன்னுஞ் சொன்னால், சீக்கிய மதத்தைத் தழுவியிருந்தாலும் சரி, பார்சி மதத்தைத் தழுவியிருந்தாலும்கூட, சீன மதத்தைத் தழுவியிருந்தாலும் கூட, சீனத் தமிழர்கள் என்று சொல்வதிலே தவறு ஒன்றுமில்லை. இப்படி ஒரு புது உணர்வை நாம் வைத்துக் கொண்டால்தான் இந்த இனத்தை முன்னேற்ற முடியும்.

ஏனென்றால், நீங்கள் நினைக்கிறீர்கள்; சீனாவில் இருக்கிற பல கோடி மக்களிலே, தமிழ் மக்கள் ஒரு கணிசமான தமிழர்கள் இருக்கிறார்கள். ஏறத்தாழ நான்கு கோடியே எழுபத்தியைந்து இலக்கம் பேர் அங்கு தமிழர்கள்! ஆனால், அவர்கள் தமிழர்கள் என்று அவர்களுக்கே தெரியாது! வரலாற்று ஆசிரியர்கள், 'அவர்கள் தமிழினத்தவர்கள், தமிழர்கள்' என்று குறிப்பிடுகின்றார்கள். அவர்கள் பேசுகின்ற மொழி தமிழ் மொழி என்று இல்லை. Tchi-mo-lo என்கிற ஒரு மொழியைப் பேசுகிறார்கள். Tchi-mo-lo என்பது தமிழ் மொழியினுடைய திரிபு. அங்கு இன்றைக்குப் போய் அவர்களை எங்களுடன் சேருங்கள் என்று சொல்லிவிட முடியாது; உண்மையாகவே, அவர்கள் அதைத் தெரிந்து கொண்டு, அந்தத் தமிழர்கள் எங்களையும் உங்களுடைய நாட்டிலே சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், நாமும் தவிர்க்க முடியாது.

ஏனென்று சொன்னால் மொழி ஒரு நிலையிலே ஓர் இனத்தை வேறுபடுத்தாது. மொழி ஓர் இனத்தை அடையாளப்படுத்தும். அந்த அடையாளப்படுத்துகின்ற உணர்ச்சி எது என்று சொன்னால், மொழிப்பற்று தான்! தமிழ்மொழி வளர வேண்டும் என்று எவனெவன் நினைக்கின்றானோ, அவனெல்லாம் உண்மையான தமிழன் என்று நாம் நினைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதிலே நாம் ஆராய்ச்சியெல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறது, நம்மை மிகவும் பிற்படுத்தச் செய்துவிடும் என்ற ஓர் உண்மையான உணர்வோடு, இந்த விளக்கத்தைத் தருகின்றேன்.

ஏனென்றால், பல சிக்கல்கள்! உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்று சொன்னவுடனே, வேறு பல நாடுகளிலிருந்து பல மடல்கள் வந்தன. உண்மையான தமிழர்களை மட்டுந்தான் நீங்கள் இதிலே ஈடுபடுத்த வேண்டும், என்று பலர் எழுதினார்கள். பெரிய மண்டைத் தொல்லையாகப் போய்விட்டது. உண்மையான தமிழர்கள் யார் என்று பார்த்தோம். ஒருவர் கூட இல்லை! (கைதட்டல்) உண்மையான தமிழர்கள் யாராவது இருக்கிறார்களா? நீங்களே சொல்லுங்கள்.

இதை நான் உண்மையாக, விளையாட்டுக்காகச் சொல்லவில்லை! சிரிப்பதற்காகவோ அல்லது நாம் கை தட்டுவதற்கோ அன்று. குடிமதிப்புக் கணக்குப் போட்டு வருகின்றது! அந்தக் குடிமதிப்புக் கணக்கைப் போடுகிற பொழுது நீங்கள் நம்முடைய இனத்தைக் குறிக்கிறீர்களா? **"இந்தியன்"** அல்லது **"இந்து"** என்று போடுவீர்கள்! மறுபடி என்ன சொல்வீர்கள், யார் என்று கேட்டால்? முதலியார், கவுண்டர், பிள்ளை, நாயுடு, நாடார், நாய்க்கர் இப்படித்தானே சொல்லுவோம்! **"தமிழன்"** என்று யாராவது சொல்லுகின்றோமா? வெளி மாநிலங்களிலே அப்படிச் சொல்லு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்சாலைகளைவிட திரைப்படங்கள் முகாமையானவையா?

### தமிழக அரசின் தாறுமாறான நடைமுறை!

தமிழக அரசு 13-12-82 திங்கள் முதல், தமிழ்நாட்டில் மின்சார வெட்டை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. அதில் தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே இருந்த 45 விழுக்காடு மின்வெட்டை, 60 விழுக்காடாக உயர்த்தியுள்ளது. ஆனால், திரைப்படக் கொட்டகைகளுக்கு, 30 விழுக்காடு மின்வெட்டையே செய்துள்ளது. தொழிற்சாலைகளைவிட திரைப்படங்கள் என்ன அவ்வளவு முகாமை வாய்ந்தனவா? தமிழக அரசின் தாறுமாறான ஆட்சியில் இப்படிப்பட்ட குளறுபடியான நடைமுறைகள் நடப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்!

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
நாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 26-12-82—இதழ் எண்: 8 | பகுதி 8


## தனி ஒருவர் முன்னேற்றமும் இன முன்னேற்றமும்!

தனி ஒருவர், இவ்வுலகில், தம்மை எந்த வகையிலும் முன்னேற்றிக் கொள்ள முடியும். ஆனால், அவர், ஏதாவது ஒரு வகையில் தம் இன முன்னேற்றத்திற்குத் துணை நின்றாலன்றி, அவரின் தனிப்பட்ட முன்னேற்றம் அவர் சார்ந்த இனத்துக்கு எந்த வகைப் பயனையும் தந்துவிட முடியாது;

தமிழினத்தில், தனிப்பட்ட முறையில் முன்னேறிய அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள், கலைஞர்கள், தொழில் திறவோர்கள், அன்றிலிருந்து இன்று வரை, பல்லாயிரக் கணக்கானவர்கள் உண்டு. தனிப்பட்ட முறையில் அவர்கள் மிகவும் போற்றத்தக்கவர்களாக, மதிக்கத்தக்கவர்களாக, நினைவுகூரத்தக்கவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களால் அவர்கள் தோன்றிய இந்தத் தமிழ் இனம் முன்னேறியது என்று கூற முடியாது. இதற்கு வெளிப்படையான வலிவான சான்றாகத் திருக்குறளைக் கூறலாம். திருக்குறளும், அதை இயற்றிய திருவள்ளுவரும் மிக மிகப் பாராட்டத் தக்கவர்கள்; என்றென்றும் நிலைத்த புகழ் அவர்க்கும் அவர் நூலுக்கும் உண்டு. ஆனால், இவ்வுலகிலேயே தனிச் சிறந்த அறிவு நூலை ஆக்கித் தந்த திருவள்ளுவர் தோன்றிய இத் தமிழினம் பெரிதும் தாழ்ந்து கிடக்கின்றது. அவர் அறிவு இந்த இனத்தை ஈடேற்றிக் கொள்ளப் பயன்படவில்லை. அஃது, அவர் குற்றமன்றாயினும், அவரின் தனியான அறிவு முன்னேற்றத்தைச் செயலாக மலர்த்திக் கொள்ள இந்த இனம், போதுமான அறிவு பெறாமல் இருப்பதும் உண்மையேயாயினும், அந்த அறிவு இந்த இன முன்னேற்றத்திற்குப் பயன்படவில்லை என்னும் கலை போன்ற முடிவை நாம் மறுத்துவிட இயலாது. இதற்கு எது காரணமாக இருக்க முடியும்? இதை நாம் அனைவரும் எண்ணிப் பார்த்தாக வேண்டிய காலம் வந்துவிட்டது.

தமிழினம் அறிவு படைத்த இனம் என்று நாமெல்லாம் பீற்றிக் கொள்கிறோம். ஒரு வகையில் அஃது உண்மையாக இருக்கலாம்! ஆனால், அந்த அறிவைச் செயலாக மலர்த்தி, அஃது ஒட்டு மொத்தமாக இந்த இனத்திற்குப் பயன்பட வேண்டும் என்கின்ற முயற்சி நம்மிடமோ, நம் முந்தைய கால அறிஞர்களிடமோ இல்லாமல் போய் விட்டது. நம் ஒவ்வொருவரின் தனித்தனி முன்னேற்றத்தைப் பற்றி மட்டுமே நாம் சிந்தித்துக் கொண்டு இருந்து விட்டோம். நம் முன்னேற்றம் நமக்கும் பயன்பட வேண்டும், நம் இனத்துக்கும் பயன்பட வேண்டும் என்னும் பரந்த விளைவுணர்வு நம்மிடம் இல்லாமல் போய்விட்டது. (இன்றுங்கூட அஃது ஓரளவேனும் நம்மிடம் வளர்ந்துள்ளது என்று கூறிவிட முடியாது.)

போரில், ஓர் இடர்ப்பாட்டில் சிக்கிக் கொண்ட ஒரு படைத் துறையில் உள்ள வீரர்கள் ஒவ்வொருவரும் தான் மட்டும் எப்படியாவது தப்பித்துக் கொண்டால் போதும் என்று எண்ணுவதைப் போன்றது, இது. "நம்மோடு போராடிக் கொண்டிருக்கும் அனைத்து வீரர்களும் தப்பிப் பிழைக்க ஒரு வழி வகுக்க வேண்டும்; அதன் வழி நாமும் தப்ப வழியுண்டு" என்று எண்ணுகின்ற மனப்பாங்கு அந்தப் படையிலுள்ள எல்லாருக்கும் வரவேண்டும். அப்படி வர வழைக்கும் உணர்வே நாம் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணும் பொதுமை உணர்வு ஆகும்.

இந்தப் பொதுமை உணர்வு நம் இனத்திற்கு ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாகவே படிப்படியாகக் குறைந்து வந்து விட்டது! 'நாம் எழுதுகிற இராமாயணம் நமக்கு அழியாத பெருமையைத் தரும்; ஆனால், நம் இனத்துக்கு அதனால் வழிவழியாகக் கேடே விளையும்' என்று கம்பர் எண்ணியிருந்திருப்பாரானால், இந்த இனத்துக்கு அவரால் தொடர்ந்த சில கேடுகள் விளைந்திருக்க முடியாது. அப்படி எண்ணுகின்ற எண்ணத்தை அவருக்குத் தராமல் போனது, அன்றைய ஆழுமுகாய வீழ்ச்சி! அந்த வீழ்ச்சியிலிருந்து, தாம் ஒருவர் மட்டுமே தப்பித்துக் கொண்டால் போதும் என்று அவர் எண்ணியதன் விளைவே இராமாயணம். அதனால் அவருக்குக் கிடைத்தது புகழ்! ஆனால் அவர் பிறந்த இவ்வினத்திற்குக் கிடைத்தது இகழ்!

இவ்வாறு, அன்றிலிருந்து இன்று வரை ஏதோ ஒரு வகையில், இத்தகைய எண்ணங்கள் கால, இட மாறுதல்களுக்கு ஏற்ப, நம் இனத்தில் உள்ளவர்களுக்கு வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன. இன்றைக்குப் பல உருவங்களில (அரசியல், பொருளியல், கலையியல் போலும் பல நிலைகளில்) அந்த எண்ணங்கள் மலர்ந்து வளர்ச்சியுற்றிருக்கின்றன. இந்த நிலைக்கு நம்மை உந்தித் தள்ளும் வலிவான ஆற்றல்களாக இருப்பவை சாதி, மதப் பற்றுகளும், தமிழ், இனப் பற்றின்மைகளுமே ஆகும்.

தனிப்பட்ட நம்மையும், நம் முன்னேற்றத்தையும் இனத்தொடு பொருத்திப் பார்க்கும் வாய்ப்பை அளிக்கும் ஒரு பெரிய ஆற்றல் நம் தாய்மொழிக்கே உண்டு; அந்தத் தாய்மொழிப் பற்றும், அதன் முன்னேற்ற முயற்சிகளும் நம்மிடையே குறைவுபடத் தொடங்கியதிலிருந்துதான், நம் இன வீழ்ச்சி வரலாறும் தொடங்குகிறது. அதன் இறுதிக் கட்டமாக, இன்று, நாம் அனைத்து வீழ்ச்சிகளுக்கும் ஆளாகியிருக்கிறோம். இந்த வீழ்ச்சிகளிலிருந்து நம்மைப் படிப்படியாக மீட்டெடுத்துக் கொள்ள வேண்டுமானால், நமக்குத் தாய்மொழி உணர்வே முதல் தேவை. தாய்மொழி உணர்வுதான் நமக்குப் பொதுச் சிந்தனையே—நம் இனம் முன்னேற வேண்டும்; அதன் வழி நாமும் முன்னேற வேண்டும்'— என்னும் இன முன்னேற்ற அடிப்படைச் சிந்தனையை நம்மிடம் வளர்க்க முடியும்.

ஆங்கிலம் முதலிய பிற மொழிகள் நமக்கு அறிவை ஊட்டலாம்; வாழ்வையும் கொடுக்கலாம். ஆனால், தனித்தனியான முன்னேற்றத்தைத் தான் அவை நமக்குக்கொடுக்க முடியும். ஒட்டு மொத்தமான இன முன்னேற்றத்தை நம் தாய்மொழியாகிய தமிழ் தான் நமக்கு உருவாக்கித் தர முடியும். இன முன்னேற்றத்துள் தனி ஒருவரின் முன்னேற்றமும்—அனைவர் முன்னேற்றமும் அடங்கிவிடும்; ஏற்பட்டும் விடும். ஆனால் தனி ஒருவரின் அல்லது பலரின் முன்னேற்றத்தால் இனம் முன்னேறிவிட முடியாது. என்றுமே முடியாது. இது தமிழின வரலாற்றால் கிடைக்கின்ற மலை போன்ற உண்மையாகும்! இதனை நாம் அனைவரும் உணரும் நாள் என்றோ! அதனை நோக்கி நாம் நடையிடுவோமாக!

○

## தமிழகத்தில் உள்ள ...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும், கடைத் தெருவிற்குச் சென்றாலும் கூடவே போவதும் வருவதும், தேவையற்ற செயல்களாகவே படுகின்றன. புலிகள் ஒருவரைப் பார்க்க, அவர்கள் தங்கியிருக்கும் அறைக்கு வரும் அன்பர்களை மடக்கிப் பலவாறு மிரட்டல் பாணியில் உசாவுவதும், தடுப்பதும், சிலரிடம் அவர்கள் தனிப்பட்ட முறையில் உரையாடுகையில், அருகில் இருந்து அதைக் கேட்பதும், அதற்குத் தடையாயிருப்பதும் விரும்பத் தகுந்த, ஒப்புக் கொள்ளத் தகுந்த செயல்களல்ல. காவல் செய்வது வேறு; கண் காணிப்பது வேறு; இப்பொழுதைய நிலையில் புலிகள் காவல் செய்யப் படவில்லை. கண்காணிக்கப் படுகிறார்கள். இது அவர்களையும் அவர்கள் தாங்கிய கொள்கையினையும், இயக்கங்களையும் அவமதிப்பதும், இழிவுபடுத்துவதும் ஆகும்.

காவலர்கள் சிலர் புலிகள் தங்கும் விடுதிகளுக்குச் சென்று, அவ்விடுதியாளர்களிடம் இவர்களைப் பற்றித் தாறுமாறாக உருவகப் படுத்திச் சொல்லவும், அவ்விடுதியாளர்கள், இவர்களை அங்குத் தங்க வேண்டாம் என்று கூறி, அறையை விட்டு இவர்களை வெறியேற்றியிருப்பதாகவும், தெரிய வருகிறது. இந் நடைமுறை மிகவும் கொடுமையானது. அவர்களுக்குப் பாதுகாவலாக இருக்க வேண்டிய, அவ்வாறு இருக்கவே அமர்த்தப் பெற்ற இவர்களே, அவர்களுக்கு இடையூறு தருவார்களானால் அவர்கள் எங்குப் போவார்கள்? அவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள் அல்லரே! முன்பே, அறிந்தோ, அறியாமலோ, இந்நாட்டுச் செய்தித்தாள்களின் முரண்பட்ட செய்திகளால், அவர்களைப் பொது மக்கள், கொடுமையாளர்களாகவும், வன்முறையாளர்களாகவும், கொள்ளையர்களாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது காவலர்களும் அவர்கள் தங்குமிடங்களில் உள்ளவர்களுக்கு அவர்களைப் பற்றித் தவறாக உருவகப்படுத்திக் கூறினால், அதனால் அவர்கள் விரட்டியடிக்கப்படுவதானால், அவர்கள் தங்குவது எங்கு? தெருத் தெருவாக அலைய வேண்டியதும், நடைபாதைகளிலும், பூங்காக்களிலும் படுத்துறங்க வேண்டியது தாமே! இந் நிலை நம் காவல் துறைக்குப் பெருமை தரக் கூடியது ஆகுமா? தொடர்புள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

இனி, அவர்கள் மேல் அரசு தொடுத்திருக்கும் வழக்குகளை நீட்டித்துக் கொண்டு போவதும் அவ்வளவு விரும்பத் தக்கதன்று. அவ்வாறு வழக்குமன்ற நடவடிக்கைகள், நம் நாட்டின் இயல்பான முறைப்படி, நீளத்தான் செய்யும் என்றால், அவர்களை எத்தனை நாட்களுக்குத் தான் இப்படி அலைய விடுவது? அல்லல்பட வைப்பது? அவல வாழ்க்கைக்கு உட்படுத்துவது? அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையில் அவர்களின் பிணையல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலாமே!

குறிப்பிட்ட நகரில் தான் அவர்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதும், ஒரு குமுகாயக் குற்றவாளியைப் போல், ஒவ்வொரு நாள் மாலையிலும் ஒரு குறிப்பிட்ட காவல் நிலையத்திற்குப் போய் அவர்கள் கையெழுத்திட்டு வர வேண்டும் என்பதும். சேர்ந்து இயங்கிய அவர்களைத் தனித் தனியாகப் பிரித்து வைத்திருப்பதும், அவர்கள் மன நிலையிலும், கொள்கை நிலையிலும் தளர்ச்சி ஏற்படும்படி செய்வதும், அவ்வளவு சிறந்த நடத்து முறைகள் அல்ல. அவர்கள் வெளியே, தனித்தனியாகத் தங்கியிருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் செலவு அவர்கள் நிலைக்கு மிக அதிகமான சுமை தருவதாகும். இப்படித் துன்பமும், தொல்லையும், பணத்தேவைகளையும் அவர்களுக்கு உண்டாக்கித் தருவது, நம் அரசினர்க்கு நல்லதன்று; பெருமை தருவதுமன்று.

எனவே, அவர்களின் வழக்குகளைத் தள்ளுபடி செய்வதற்கும், அவர்களை இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்வதற்கும், ஏதாவது, சட்டப்படி, அவ்வாறில்லையானால், மாந்தநேய உறவுப்படி, வழிவகை இருக்கிறதா என்று பார்க்கும்படி மாநில, நடுவண் அரசுகளைக் கேட்டுக் கொள்கிறோம். அப்படிப்பட்ட இறுதியான ஒரு நடவடிக்கைக்கு, இன்னும் நேரம் வாய்க்கவில்லை என்று அரசு கருதினால், அவர்களின் பிணையற்காலக் கட்டுப்பாடுகளையேனும் தளர்த்தல் செய்ய வேண்டும் என்று கோருகிறோம்.

இக்கால் குற்றப்படுத்தப் பட்டிருக்கும் ஐவரில் மூவர் அவர்களின் விடுதலையியக்க முறைப்படி ஒரு பிரிவினராகவும் இருவர் ஒரு பிரிவினராகவும் இயங்குபவராவர். அவர்களை அவ்வப் பிரிவின் படியே வேறு வேறு இடங்களில் ஒன்றாக இருக்கச் செய்வதில் தவறொன்றுமல்லை என்று கருதுகிறோம். மேலும் அவர்களின் வாழ்வியல் நடவடிக்கையிலெல்லாம் காவலர்கள் வீணாகத் தலையிட்டு அல்லது குறுக்கிட்டு அவர்களுக்குத் தொல்லை தருவதிலும் நயமில்லை என்று எண்ணுகிறோம்.

இனி, இன்னொன்றையும் நம் அரசு கழிவிரக்கத்துடன் கவனிக்க வேண்டும். அவர்கள் பிணையலில் இருக்கும் பொழுது, (சிறைக்குள் அவர்களுக்கான உணவு, உறையுள் செலவை அரசு செய்தது போல்) வெளியில் அவர்களுக்காகும் உணவு, உறையுள் செலவை அரசு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்விடத்தில் அவர்கள் அயல் நாட்டினர் என்பதையும், அவர்களுக்கு இங்கு எந்த வகையான வாழ்க்கைக் கூறுகளும் இல்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது.

இந்நிலைகளைப் பற்றியெல்லாம் மாநில, நடுவண் அரசுகள், தொடர்புள்ள அதிகாரிகள், முறையாகச் சிந்தித்து, அவர்கள் சார்பில், மிகுந்த பரிவுடனும், கண்ணியத்துடனும், அதேபொழுதில், அவர்களுக்கு இழுக்கு ஏற்படா வகையிலும் பெருமை குன்றா நிலையிலும் நடுநிலை உணர்வுடனும், மாந்த நேய உறவுடனும், உலக உரிமைப் பொது நோக்குடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பாகவும், அவர்கள் பால் அன்பு கூரும் தமிழக மக்கள், தலைவர்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ள

-பெருஞ்சித்திரனார்

# புறக்கணிக்கப்பட்ட திரு. வி. க. நூற்றாண்டு விழா!

புலவர். ந. ச. தமிழன், திருவாரூர்

தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் நூற்றாண்டு விழா வந்துவிட்டது. பாரதியார் நூற்றாண்டின் நிழல் இன்னும் நீங்கியபாடில்லை. திரு. வி. க.வின் நூற்றாண்டுவிழா இவ்வாறு முழுமையாகக் கொண்டாடாமல் புறக்கணிக்கப்படுகிறதே! விழா மட்டுமா? திரு. வி. க. வாழ்க்கையே முப்பெரும் இயக்கங்களால் புறக்கணிக்கப்பட்டது தானே?

## தேசிய இயக்கப் புறக்கணிப்பு :-

திலகரின் தீவிர வழியிலே தமிழக வேங்கைகள் வ. உ. சி. பாரதியார், திரு. வி. க. போன்ற சான்றோர் நடையிட்டார்கள். காந்திய நிலவு திலகக் கதிரவனுக்குப் பின் வந்ததும் பிற தாமரைகள் சாம்பிக் கொண்டன. ஆயின் திரு. வி. க. தாமரை அல்லியும் ஆயிற்று. ஆனாலும், தேர்தலில் வென்று வெள்ளையர்க்குக் காட்டி விட்டு, ஆட்சிக் கட்டிலில் அமர மாட்டோம் என்று பேராயம் (காங்கிரசு) கூவியதை நம்பி தேர்தல் வெற்றியெனும் விடிவெள்ளியைத் தோற்றுவித்தார், திரு வி. க.. ஆட்சி; அரியணையில் அமர்ந்து திரு.வி க. வைப் பார்த்து அட்டணைக்கால் ஆட்டியது.

திரு. வி. க. வைச் சிறைப்பிடித்தால் ஏற்படும் எரிமலை வெடிப்புகளை எண்ணி ஆங்கில அரசு அமைதி காத்ததால், சிறைக்கம்பிகளைப் புறங்கண்ட திரு. வி. க.வைச் சிலநாள் சிறைக்கம்பிகளை எண்ணிவிட்டு வந்த சில்லறைகள் சீண்டினார்கள்

உப்பு அறப்போருக்குத் திருச்சிராப்பள்ளியில் தொடங்கித் திருமரைக் காட்டில் முடியும் தமிழ்நாட்டுப் போர்க்குழுவின் தலைவராகத் தக்கவர் யார் என்று வினா எழுந்தபோது, திரு. வி. க.. திரு. வி. க. என்று தமிழ்நாடு முற்றும் கூவியும், இராசாசி அவர்கள் தலைவராக அறிவிக்கப்பட்டார் முதல் நாள் அவர் தளைப்பட்டால் அடுத்த நாள் ஆர் என்று ஆர்வ வினா எழுந்த போது திரு. க. சந்தானம் என்று அறிக்கை கூறியது.

திரு வி வி. கிரி, திரு வி. க.விற்குத் தொழிற் கழகத் துணைவராகப் பணியாற்றியவர். தேர்தலில் வென்று தொழிலாளர் அமைச்சரானதும் ஒருமுறை ஒரு தொழிலகத் தொழிலாளர்களைப் பேச்சு நடத்தத், தம் வீட்டிற்கு வரச் சொன்னாராம். குப்பல் கும்பலாக வீட்டுக்குச் சென்ற தொழிலாளர்களைக் கண்ட திரு. வி. க, திரு. கிரியின் வீடு சென்று வாயில் மணியழுத்தி வந்த வி. வி. கிரியிடம் ஒருவர் பலரிருக்கும் இடத்திற்குச் செல்வது எளிதா? பலர் ஒருவர் இருக்குமிடத்திற்கு வருவது எளிதா?' எனக் கேட்டுக் கிரியைச் சரி செய்தார்.

## திராவிட இயக்கப் புறக்கணிப்பு :-

வகுப்புவாரி நிகராண்மையை, அது சாதிப் பிளவை மேலும் வலிவாக்கும் என நினைத்த திரு. வி க. எதிர்த்தார். இடைக்காலத் தேவையாக அது சில்லாண்டு இருக்கலாம். எனினும் நூற்றாண்டுக்குப் பின்பேனும் பிற்பட்டோர் முற்பட்டோர் என்பது பொருளியல் பற்றிப் பொருத்தப்படுவதே சரியாம் அன்றோ? ஆயின் காஞ்சிபுரம் மாநாட்டில் பெரியார் பெரிதாக்கப் போகின்றார் எனத் தெரிந்து முதல் நாள் இருந்த இராசாசி இரண்டாம்நாள் திரு. வி. க. வைத் தலைவராக்கிப் போய்விடவே. பெரியார் வலியுறுத்திப் பிரிந்தார். திரு வி. க. பெண்மைத் தன்மையர் என்று பேசிய பெரியார் நாகம்மையார் படத்திறப்புக்குத் திரு.வி.க.வைத் தான் அழைத்தார். இறுதிக் காலத்தில் திரு வி. க 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று கூவிய போது, திராவிட இயக்கம், திராவிட நாட்டுப் பண் பாடிக் கொண்டிருந்தது.

## பொதுவுடைமை இயக்கப் புறக்கணிப்பு :-

'பின்னி' தொழிலாளர் குடியிருப்பில் 1916-இல் 'குணமிருத வருசணி' என்னும் அமைப்பின் வழியே அழகுதமிழ் மொழிப் பேச்சைப் பழகு தமிழ் ஆக்கிக் கொண்டிருந்த போது—சோவியத்துப் புரட்சி நேரத்தில் அவையொத்த தொழிற் கழகந் தொடங்கியவர் திரு. வி.க.. அவர் தொழிற்சாலைகளில் தொழிலாளர்க்குப் பங்குதரல் வேண்டுமென்னும் கருத்துடையர். பொதுவுடைமையாளர் நாட்டு விடுதலைக்குப் பின் பூரிப்பூதியம் (Bonus) பெற்றுத்தர முனைந்தபோது அவ்வளவு ஆர்வங்காட்டினாரில்லை. அதனாலோ வேறு எதனாலோ கண்குருடுப்பட்டுப் படுக்கையில் கிடக்கையில், முதிய தலைவர்கள் பொதுவுடைமை நாட்டுக் கைக்கூலி என்று திரு வி.க. வைப் பாராது இருந்தபொழுதில், பொதுவுடைமை இயக்கமும் அவ்வாறே அமைந்தது. தேசிய மதவாதியான பாரதியைத் தலையில் தூக்கி ஆடிய பொதுவுடைமை இயக்கம் அத்தகையரான திரு.வி.க.வைக் கைவிட்டது எதனால் என்று தெரியவில்லை.

## முடிவுரை:

11—12—82 அன்றோடு பாரதிக்குக் காலை 7 முதல் 7-15 வரை ஓராண்டு முதல் நடத்திவந்த வானொலிக்கு அது முடிந்தபின் திரு. வி. க.வைப்பற்றி ஒலிபரப்புங்கள் என்று மடல் எழுதியிருந்தோம். ஆயின் இசையின்பம் என்னும் தெலுங்கிசையும் தமிழிசை எனத் தமிழிசையும் ஒலிபரப்பப்படுகின்றன.

இவ்வண்ணம் திரு. வி. க. என்னும் நடுநிலைச் சான்றோர் அனைவர்க்கும் பாடாற்றி அனைவராலும் புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்தார். அவரின் நூற்றாண்டு இப்போது நிகழ்ந்து கொண்டுள்ளது. சிறிதேனும் ஒன்றியுணர்வுள்ள தமிழ் நெஞ்சங்கள் நினைவு கொள்வதாக!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்களா என்று பார்க்க வேண்டும். அவர்கள் மொழி வழியாக அவர்களுடைய இனத்தை அவர்கள் புலப்படுத்துகிறார்கள் நாங்கள் "சீக்கியர்"; சீக்கிய மொழி பேசுகிறோம்; எனவே சீக்கியர். பஞ்சாபி மொழி பேசுகிறோம்; எனவே "பஞ்சாபி"கள். மலையாள மொழி பேசுகிறோம்; எனவே "மலையாளி"கள் என்று சொல்லுகின்றான்! தமிழன் எவனாவது ஒருவனாவது, அந்தக் குடி மதிப்புக் கணக்கிலோ; அல்லது வேறு எங்கேயாவது சான்றிதழ் எழுதுகிற பொழுதோ, என்று தன்னைத் தமிழன் என்று சொல்லிக் கொள்கிறானோ? இல்லவேயில்லை! வேறு ஒருவனாகவே அவன் இருக்கிறான்? கண்டுபிடிக்க முடியாதே! இந்த நிலைகளை நான் சொல்லுகின்ற பொழுது, பெரிய வருத்தத்தோடு தான் சொல்கிறேன். எனவே எது தமிழ்? எவன் தமிழன்? தமிழினம் என்று சொன்னால், அது ஒரு பெரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க, தொன்று தொட்ட பெரியதோர் இனம்!

அந்த இனம் அழிந்து போய்விட்டது இன்றைக்கு! ஆனால், நாம் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம்! எந்த வகையிலே தமிழர்கள்? அதற்கு என்ன அடிப்படை? இதையெல்லாம் நாம் பேசப்பேச, நம் எதிரி, இது, தானே அழிந்து போகிற இனம், அது போகட்டும் என்றுதான் நினைப்பானே தவிர, நாம் உண்மையைக் கண்டுபிடிக்கிறோம் என்று நினைப்பான்?

நமக்குள்ளே ஏதாவது ஒரு போட்டி வந்தால், எதிரிக்கு மிக இளக்காரம்! இந்தப் போட்டியினாலே இந்த இனம் அழிந்து போகட்டும், தி மு. க. வை அ. தி. மு. க. எதிர்த்தால் உடனே மகிழ்ச்சி அவனுக்கு! அதிலே உள்ள சூழ்ச்சி நமக்குத் தெரிவதேயில்லை! நமக்கு ஏதோ கட்சி பெரிது! எம். சி. ஆர். கலைஞர் பெரிது! என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்! கலைஞரும் பெரிது, எம். சி. ஆரும் பெரிது என்று நாம் நினைத்துக் கொண்டு, இந்த இனத்தை ஒன்றுபடுத்துவதற்குரிய முயற்சியிலே நாம் ஈடுபட வேண்டும். அப்பொழுது நாம் எல்லாருக்கும் ஆதரவு தருகிறதா? எப்படி ஆதரவு தருகிறது! இந்த இடத்தில் வேறுஉணர்வெல்லாம் நமக்கு வரக் கூடாது! நமக்கு ஒரே குறிக்கோள் இருக்க வேண்டும்! **தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ் நாட்டிற்கும், யார் உண்மையான முன்னேற்ற நிலையிலே தொண்டு செய்கிறார்களோ, உழைக்கின்றார்களோ, நலம் செய்கின்றார்களா, நலம் நாடுகிறார்களோ அத்தனை பேரையும் தமிழர்கள் என்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.** அப்படி இல்லையானால், இந்த இனம் அழிந்து போகும்! அதேபோல் தான் சமயக் கொள்கையும். அதனால்தான் நான் திராவிடக் கழகத்தாருக்குக்கூட சொல்லிக் கொண்டு வருகிறேன்! அருள் கனிந்து உங்களுடைய இறை மறுப்புக் கொள்கையைப் பொது மக்களிடத்திலே வைக்க வேண்டாம்! உங்களுடைய கழகத்திலே, அவைகள் தொடர்பான எத்தனைக் கருத்துகளையும் பரப்புங்கள்! அதைப் பொதுமக்களிடத்திலே நீங்கள் கொண்டு போய் வைத்து, அவர்கள் எல்லாரும் சேர்ந்து, உங்களை ஒரு பெரிய நாத்திகக்கூட்டம்—நாத்திக இனம் என்கின்ற கண்ணோட்டத்திலேயே பார்க்கும்படியான வாய்ப்பை நீங்கள் கொடுக்காதீர்கள்! இந்த இனம் ஒன்றுபட வேண்டும்! ஏன்? அதில் என்ன இருக்கிறது? பகுத்தறிவுக் கொள்கை பரவக் கூடாதா? பரவத்தான் வேண்டும்! பகுத்தறிவுக் கொள்கை பரவினால், அது பரவட்டும்! நாம் யாரும் அதைத் தடை சொல்லப் போகிறதில்லையே! ஆனால், அதற்குள் இந்த இனமே போய்விடுமே! இப்பொழுது அப்படித்தான் போய்கொண்டிருக்கிறது! எதிரி வலுப் பெற்றுக் கொண்டிருக்கின்றான்! நான் பல நிலைகளிலே வெளிப்படையாகவும் சொல்கிறேன்; சில நிலைகளிலே குறிப்பாகவும் சொல்ல வேண்டியிருக்கிறது! அது, பல நன்மைகளைக் கருதி அப்படிச் சொல்கிறேன்! ஏன் என்று சொன்னால், "கடவுள் இல்லை" என்று சொன்னவுடனே இவன் நாத்திகன் என்று சொல்லி, நாம் வேறு வகையான இனநலக் கொள்கையைச் சொன்னாலும். நாட்டுநலக் கொள்கையைச் சொன்னாலும், அவன் நம்மை நெருங்குவதில்லை! யார் "கடவுள் கொள்கையைக் கொண்டிருக்கின்றார்களோ, அவர்களிடத்திலே போகிறான்! யார் இந்த நாட்டிலே கடவுள் கொள்கையை—அது கலப்படமான கடவுள் கொள்கையானாலும் சரி—வைத்துக் கொண்டிருக்கிறார்? பார்ப்பனர் தானே! எங்களுடைய கட்சிக்கு வந்து சேருங்கள் என்று அவன் தான் கடை விரித்திருக்கிறானே! பெரிய இந்து மதம் என்ற பெரிய பலகையைப் போட்டுக் கொண்டு, எவனெவன் எங்கிருந்து வருகிறீர்களோ, அத்தனை பேரையும் நான் சேர்த்துக் கொள்கிறேன், என்று சொல்கிறான்! நமக்கு அந்த உணர்ச்சி வேண்டாமா? உடனே அவனைத் தேடிப் போகிறான்! அவனைத் தேடிப் போனவுடனே, அவன் எல்லாரையும் அழைத்துக்கொண்டு, வாருங்கள் என்று, மேலும் அவனை எப்படி இழிவுப்படுத்துவது, மூடனாக்குவது. எப்படி அவனைத் தன் இன நலத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது என்ற வகையிலே, அவன் அவர்களை விபீடணன்களாகவும், பிரகலாதன்களாகவும் ஆக்கிக் கொள்கிறான்! இந்த நிலை இந்த நாட்டிலே இருக்கலாமா? நாம் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா? நாம் இப்படிச் சிந்திக்காததனால் தானே நமக்கு உணர்ச்சி வரவில்லை!

இந்த உணர்ச்சியில்லாமல் கட்சி, மதம் அது இது என்று சிந்தித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்? எனவே இத்தகு அடிப்படையான ஓர் உண்மைக்கு, நாம் அடிப்படையாக மொழி நிலையில் ஒரு பற்றை—தாய் மொழிப் பற்றை — நாம் கொள்ள வேண்டும். தமிழ் வளர வேண்டும்; தமிழ் தூய்மையாகப் பேசப்பெற வேண்டும்; கலப்புத் தமிழாகவும், கொச்சைத் தமிழாகவும் நாம் பேசக்கூடாது. கொச்சைத் தமிழாகக்கூடப் பேசிவிடலாம்; கலப்புத் தமிழாகப் பேசக்கூடாது. 'வாண்ணே! போண்ணே'! என்றுகூடப் பேசலாம்! 'வாருங்கள் அண்ணே' 'போங்கள் அண்ணே' என்று சொல்ல வேண்டியதில்லை! சில பேர் சொல்லுவார்கள்! 'தூய் தமிழ்னு என்னுங்க! அப்படியே இலக்கணத் தமிழான்னு' கேட்பார்!' இலக்கணத் தமிழ் அன்று? புலவர் தமிழும் அன்று. தூய தமிழ் என்றால், தூய்மையான தமிழ்! அவ்வளவு தான்! கலப்பில்லாமல் இருக்க வேண்டும்! தமிழன் தான் கலப்பாகப் பேசுகின்றான் மொழியை! உலகில் எங்கும் இல்லை! போய் எங்காவது மொழியறிஞர்களைக் கேட்டுப் பாருங்கள்! வேறு எந்த இனத்திலும் இப்படி இல்லை! ஆங்கிலம் ஏற்கனவே கலந்த மொழி! அது ஏறத்தாழ 30, 35 உலக மொழிகளைத் தன்னத்தே கொண்டுள்ளது. அதை நாம் கணக்கில் சேர்க்கக்கூடாது! மீது மொழிகள் கலப்பு மொழி தான்! பல நிலைகளிலே! ஆனால், அவை ஏன் கலப்பு மொழிகளாக இருக்கின்றன என்று சொன்னால், அந்த மொழியில் பல வகையான கருத்துகளைச் சொல்வதற்குச் சொற்கள் இல்லை! எனவே வேற்றுச் சொற்களைசேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! தமிழ் மொழியிலே அப்படிச் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை! ஏற்கனவே நிறைய சொற்களுண்டு; அதுவுமில்லாமல் புதுச் சொற்களையும் படைக்கலாம்! அதற்கான மூலக்கூறுகள் நம்மிடத்திலே இருக்கின்றன! அந்த முயற்சி இன்றைக்குப் பெரிய முயற்சியாய் நமக்கு ஏன் தெரிகிறது என்று சொன்னால், அந்த முயற்சி தொடக்கக் காலத்திலேயே போய்விட்டது தான்!

(—தொடரும்)

## தெரியுமா செய்தி?

(1) மரங்கொத்தியின் மண்டை ஓடும் அலகும் ஒரே எலும்பில் ஆனவை.

(2) முதலை தூங்கும்பொழுது கண்ணைத்திறந்து வைத்துக் கொண்டுதான் தூங்கும்.

(3) இலண்டனில் குளிர்காலத்திற் பிற்பகல் 9 மணி வரையிலும் நல்ல வெளிச்சமிருக்கும். ஆனால், கோடைகாலத்திலோ பிற்பகல் 4 மணிக்கே இருட்டி விடும்.

(4) உலகத்தில் 2600 வகைத் தவளையினங்கள் இருக்கின்றன.

-கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்

# கேளுங்கள் விடை சொல்கிறோம்

**தென்னவன்,** தூத்துக்குடி.

(?) தமிழ் வழிபாட்டு முறையினை நீக்க வேண்டி உயர்நீதிமன்றத்தில் ஆரியப் பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தார்கள். அதனை எதிர்த்துக் கழகம் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன ?

(!) வழக்கு மன்ற நடவடிக்கைகளால் தமிழுக்கு உயர்ச்சியோ தாழ்ச்சியோ எவரும் ஏற்படுத்திவிட முடியாது. அப்படிப்பட்ட முடிவுகள் நிலையானவையாகவும் இருக்க முடியாது, மக்களுக்குத் தமிழுணர்வும் தமிழறிவும் ஊட்டப் பெற வேண்டும். படிப்படியாகச் செய்யப் பெறும் அவ்வகை முயற்சிகளாலேயே நிலையான பயன் கிடைக்க முடியும் அந்நிலை ஓரளவு வெற்றி பெற்றாலும், இந்நாட்டில் தமிழுக்கோ, தமிழின நலத்துக்கோ மாறான எந்த முயற்சியும் எவராலும் செய்துவிட முடியாது. இம்முறையான செயற்பாட்டுக இடையில், தமிழுக்கும் தமிழர் நலத்துக்கும் எந்த ஓர் ஊறுபாடு நேர்ந்தாலும், கழகம் கண்டிப்பான, தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறிவிடாது.

**செ. ஈசுவரமூர்த்தி,** பல்லடம்.

(?) இலவயப் பல்பொடிக்காக உருபா 1.25 கோடியை இந்த அரசு செலவிட உள்ளது இது ஒரு பெரிய 'புரட்சித் திட்டந்தானே !

(!) இதைவிட தமிழ்மக்களை இழிவுபடுத்தும் திட்டம் வேறு இருக்க முடியாது. உலகிற்க்க பண்பாடும் நாகரிகமும் கற்பித்த தமிழினத்திற்கு, இன்று பல்பொடி வாங்கிக் கொடுத்துப் பல்விளக்கும் அறிவையூட்ட வேண்டும் என்று அரச கருதுவது இழிவும், கோமாளித்தனமும் ஆகும். என்ன செய்வது? அவரவர் அறிவுக்குத் தகுந்ததைத் தானே ஆட்சியில் உள்ளவர்கள் • செய்ய முடியும் !

(?) விளக்கணி(தீபாவளி) விழாவின் பொழுது பயன்படுத்தப்படும் கோடிக்கணக்கான உருபா மதிப்புள்ள வெடிகளினால் போக்கு வரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறுகவம். மக்களின் மனவுணர்வுகளை சிதைப்பதாகவும் இருக்கின்றன. இவற்றுக்கு இந்த மூட அரசு தடை இடுமா?

(!) மூட அரசு எப்படித் தடையிடும்? அறிவுள்ள அரசு வரும் வரை காத்திருக்க — அல்லது தாங்கிக் கொள்ள—வேண்டியது தான்

**ப. சுவாமிநாதன்** ஊற்றங்கரை.

(?) அய்யாவின் (பெரியாரின்) தமிழ் எழுத்துச்சீர்திருத்தத்தைத் 'தமிழ் நிலம்' ஏற்றுக் கொள்ளாததேன்?

(!) தமிழ்மொழிச் சீர்திருத்தமே, 'தமிழ் நிலத்'தின் முதற் கொள்கை! மொழி இருந்தாலன்றோ எழுத்திருக்கும். எழுத்திருந்து மொழியில்லாமற் போயின் என்ன பயன்? மொழிச் சீர்திருத்தத்தை, எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் ஏற்றுக்கொள்ளும் போது. 'தமிழ் நில'மும் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும் நங்களெல்லாம் மொழியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே 'தமிழ் நிலம்' எழுத்துச் சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கிறது, பார்ப்பனியத்தைப்பிறவற்றிலெல்லாம் எதிர்க்கின்றவர்கள் மொழியில் மட்டும் அதை வரவேற்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியவலலை: அஃது அறிவுக்குப் பொருந்தியது என்று ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை. பார்ப்பனீயம் இல்லாமல் தமிழன் வாழ முடியும் என்றால், அவன் மொழியாகிய சமசுக்கிருதம் இல்லாமல் தமிழ் மட்டும் வாழ முடியாதா. என்ன ? பார்ப்பனீயம் கசக்கிறது! அதன் மொழி மட்டும் இனிக்கிறதோ?

மொழியைத்திருத்திக் கொள்ளாமல் எழுத்தை மட்டும் திருத்த முற்படுவது ஒருபோலிச் சீர்திருத்தமே! அதனால் தமிழ்மொழிக்கு முழுப் பயன் ஏற்பட்டுவிடாது. உடலில் உள்ள நோயைப் போக்கிக் கொள்ள முற்படாமல். வெறும் சட்டையை மட்டும் மாற்றிக்கொள்ளுதில் கவனம் செலுத்துவதைப் போன்றது, அது எடுத்துக் காட்டாக. உங்கள்பெயரைப் பாருங்கள்! அதில் தமிழ் எழுத்துத்தான் உள்ளது; ஆனால் ஆரிய அடிமைத்தனம் உள்ளதே! அந்த இழிவைப் பற்றி நீங்கள் சிந்திக்கவில்லையே! அதைப் பற்றிய உங்கள் சிந்தனையை வளர்ப்பதற்காகவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நாங்கள் செயலுக்குக் கொண்டு வரவில்லை. மற்றபடி நாங்கள் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இல்லை. முதலில் செய்வது எது. இரண்டாவதாகச் செய்வது எது என்பதில் நாங்கள் கருத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டாவதைச் செயலுக்குக் கொண்டு வரும் பொழுது, முதலாவது புறக்கணிக்கப்பட்டு விடும் என்பது குமுகாய மனவியல்! யானை வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் நாங்கள்! எதிரில் வரும் பூனையின் பின்னால் செல்ல விரும்பவில்லை! அஃது இழிந்தது; ஏமாற்றம் தருவது அல்லது ஏமாறுவது!

**வி. தண்டாயுதபாணி,** காரைக்கால்.

(?) மதிவாணன் என்பது தமிழ் பெயரா?

(!) தூய தனித் தமிழ்ப் பெயர். மதியால் (அறிவால்) வாழ்கிறவன் என்பது பொருள்!

**க. கருப்பையா,** கிழைக்கரை.

(?) பேச்சு வழக்கில் அண்ணன். தம்பி. அப்பா, அம்மா. அக்காள, 'தங்கச்சி' என உள்ளன. ஆனால் இலக்கிய வழக்கில் மற்றவை அப்படியே இருந்தாலும், 'தங்கச்சி' மட்டும் 'தங்கை' என்றே உள்ளது. ஆக பேச்சு வழக்கில். 'தங்கச்சி' என்று மாறியது எப்படி ?

(!) 'அச்சி', என்னும் உறவுப பெயர்ச்சொல் ஈறு 'ஆய்ச்சி' என்னும் சொல்லின் திரிபாகும். ஆய்ச்சி என்பது அன்னையைக் குறிக்கும் சொல். அதுவே ஆச்சி, அச்சி என்று திரிந்து வழங்கும் ஆச்சி என்னும் ஈறு பெண்பாலுக்கே உரியதாக வழங்குகிறது. அச்சி என்பது மட்டும் இருபாலுக்கும் உரிய திரபு ஈறாக வழக்கில் வந்துவிட்டது. அண்ணச்சி, அக்கைச்சி, அம்மைச்சி என்று சில சொற்களிலும் வழக்கில் வந்ததுபோல் தங்கைச்சி என்றும் வந்து கொச்சையாகத் 'தங்கச்சி' என்று வழங்குகிறது.

## தமிழினத்துக்கு உழைப்பவர்

கேள்வி : உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைப்பற்றி...?

பதில் : எனக்கு அறிமுகமில்லை! மிசாக் கைதியாக் இருந்தபோது சிறையில் பார்த்திருக்கிறேன்! மறைமலையையும் பாவாணரையும் பின்பற்றும் நல்ல தமிழ் ஆய்வாளர். இன மான வீறு கொண்டவர்! அரசியலுக்கு அப்பாற்பட்ட தமிழறிஞர் அவர் ஒருவர் தான். மிசா'வில் உள்ளே போனார்! அவர் உறுதியாக தமிழினத்துக்கு உழைப்பவர் என்பதற்கு வேறு சான்று தேவையில்லை!

'செங்கதிரோன்' ''அறிவீட்டி''யின்
விடைகளில் இருந்து
செய்தி. **'விடியல் விரும்பி'**

---

மடல் தொடர் - 1

## உ.த.மு.க. உறவு மடல் !

தோழமை உள்ளவர்களே !

'தமிழ்ப்பணி' இதழைப் புரட்டியதும் ''சென்னைப் பல்கலைக் கழகத்தில் சீனக் கல்விக்குத் தனித் துறை'' என்ற தலைப்பில் கண்ணில்பட்டது!

1982 அக்டோபர் 22, 23 ஆகிய நாட்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பேரவை, ஆட்சிப் பேரவை கூடியுள்ளன. அதில் பர். ந. சஞ்சீவி தமிழகத்திற்கும் சீனாவிற்கும் ஏற்பட்ட நாகரிகப் பண்பாட்டு உறவுகளை ஆராயத் தனித்துறை ஏற்படுத்த வேண்டுமென்று முன் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதறிந்து பாராட்டுகிறோம்.

இந்திய—சீன உறவுகளைப் பொதுப்பட ஆராய வேண்டும் என்ற இந்திய ஒருமைப்பாடு என்ற போர்வையில் எடுத்துக் கொண்டவரின் முயற்சி முறியடிக்கப் பட்டுள்ளது. இதற்கென வட இந்தியப் பல்கலைக் கழகங்கள் முயல்கின்றன.

ஆழமான தேசியப் பண்பாட்டுறவுகளைப் பல்வேறு தேசியங்கள் உள்ள நாட்டில் பொதுப்பட ஆராய்வது நுனிப்புல் மேயவதாகவே முடியும்!

எனவே, பர். ந. சஞ்சீவி எடுத்த முயற்சியினைப் பாராட்டுவோம்!

'பாம்பு தின்பவர்' சீனர் என்பது போன்ற கொச்சையான வசையின் மூலம் ஒரு பழம் பண்பாடுடைய நாட்டின் உறவை இழக்கத் துணிந்த தவறான அரசியல் பார்வையிலிருந்து நம்மை நாம் விடுவித்துக் கொள்ளும் ஆய்வுகள் ஆவ்வாறு பெருக வேண்டும்!

தமிழின உறவு வையகமெல்லாம் வலுப்பெற முயல்வோம்!

அன்புள்ள,
**பற்றம்பை அறிவன்**

---

## மதுரை (வடக்கு) மாவட்ட உ.த.மு.க. செயலர்களுக்கோர் அறிவிப்பு!

அன்பு நெஞ்சுகளே!

நாம் மாவட்டத்தில் உ த மு. க. அறிமுக. கொள்கை விளக்க மாநாட்டை, விரைவில் நடத்த வேண்டியிருப்பதால். வட்டச்செயலர்கள் விரைவில் அணியமாகும்படி வேண்டுகிறேன. மதுரை (வடக்கு) மாவட்டத்தின் நடுவமான திண்டுக்கல்லில் மாநாட்டை நடத்தலாம் என்று எண்ணியுள்ளோம். செயலர்கள் தத்தம் கருத்தையும் இசைவையும் எமக்கு விடுத்து வைக்க வேண்டும். கோடைக்கானல் அன்பர்கள் தம் பொறுப்பமர்த்தம் பற்றிய விளக்கத்தையும் அனைத்து வட்ட அமைப்புகள் தத்தம் தலைவர், செயலர், பொருளாளர்களின் நிலையான இல்ல முகவரிகளையும் எமக்கறிவிக்க வேண்டுகிறேன்.

அன்பு,
**மணிமுத்து**
மாவட்டச் செயலாளர்
மதுரை மாவட்டம் (வடக்கு)

முகவரி : தமிழ்ச்சுடர், பழனி-624602.

# செயவர்த்தனேவை ஆதரித்துச் சிவாசிகணேசன் பேசுவதா ?

வழக்கறிஞர். ப. பத்மநாபன், க. மு , ச. இ சோமனூர்

அண்மையில் பாலத்தீன விடுதலை பற்றி உருசியா மற்றும் சீனத் தலைவர்களின் ஆதரவு பெற சோர்டான் (Jordan) நாட்டு மன்னர் உசேன் (Hussain) தலைமையில் "அரபுலீக்" (Arab league) சார்பாகத் தூதுக்குழு மாசுக்கோவிற்கும், பெசிங் (Moscow and Beijing) க்கும் சென்றுள்ள செய்தியை நாம் செய்தி ஏடுகளில் கண்டோம். பாலத்தீனிய அரபு உடன்பிறப்புகளின் தாயகம் மீட்கப்பட, தனி உரிமைப் பாலத்தீனிய நாடமைய, எல்லா அரபு மக்களும், அவர்களின் அரசுகளும், நாடுகளும் எல்லா வகை உதவியையும் செய்து வருகின்றார்கள். மேற்காசிய அரபு இனமக்கள் (Arabs) தங்களுக்கிடையே பல நாட்டு மக்களாகப் பிரிந்து வாழ்ந்தாலும், பாலத்தீனியம் அமைப்பதை இன மான இலக்காகக் கொண்டு இயங்குகின்றார்கள். தம்மின உடன்பிறப்புகளான பாலத்தீனியருக்கு முழுமூச்சாக உதவி வருகிறார்கள். பாராட்டத் தக்கதும், இயற்கையானதும், உண்மையாக ஏற்கக் கூடியதுமான இனப்பற்று அவர்களுடையது.

மேற்காசியாவை அடுத்து ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென்முனையிலும் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட கறுப்பு மக்கள் (Black-People) வெள்ளை இனக் குடியிருப்பு (காலனி) மற்றும் நிறவெறி ஆட்சிக்கெதிராகப் போராடி வருகின்றார்கள். கறுப்பு இன மக்கள் வாழும் ஆப்பிரிக்கக் கண்டம் முழுதும் தென் ஆப்பிரிக்கா நாட்டிலும், தென்மேற்கு (நமீபிய) ஆப்பிரிக்கா (South Africa and South West Africa) நாட்டிலும் விடுதலைப் போர் நடத்திவரும் தம்மின மக்களுக்கு முழு ஆதரவும் அனைத்து உதவிகளும் அளித்து உதவி வருகின்றனர். சென்ற 10-12-82ஆம் நாளைய செய்தி ஏட்டிலும் தென் ஆப்பிரிக்க விடுதலை இயக்கமான ஆப்பிரிக்கத் தேசியப் பேராயக் (African Congress) கட்சியினருக்குப் புகலிடம் அளித்ததற்காக லெசோத்தா (Lesotha) நாட்டினுள் தென் ஆப்பிரிக்கா நாட்டைச் சேர்ந்த வெள்ளைக் குடியிருப்பு (காலனி) ஆட்சியினரின் படைகள் புகுந்து மிகுந்த சேதம் விளைவித்த செய்தியை அறிகிறோம். இன்று (11-12-82) உலகநாடுகள் பொது அவை கூட இதற்காகத் தென் ஆப்பிரிக்க வெள்ளை இனவெறி அரசை கண்டித்துள்ளது. அதேபோல தென்மேற்கு ஆப்பிரிக்க (நமீபியா) நாட்டு சுவாபபோ (Swapo) விடுதலை வீரர்களுக்குப் புகலிடம் அளித்ததற்காக அங்கோலா (Angola) என்ற அண்டை நாட்டின் மீதும் அதே தென்னாப்பிரிக்கா நாட்டின் வெள்ளையின இனவெறி ஆட்சிப் படையும் வானூர்திப் படையும் படையெடுத்தும், குண்டு வீசியும் ஏராளமான சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. இது பற்றிய செய்திகளும் நமக்கு நிறைய செய்தி ஏடுகளில் கிடைக்கின்றன. இப்படித் தம்மின மக்கள் விடுதலை பெற வேண்டும், அவர்கள் நாடு உரிமை நாடுகளாக மலர வேண்டும் என ஆப்பிரிக்காவின் தென்முனையில் உள்ள இரண்டு அடிமையுற்ற நாடுகளுக்கு அண்டை நாடுகள் அனைத்தும் முழுமுயற்சியுடன், பல ஈகங்களைச் செய்து உதவி வருகின்றார்கள். அண்மையில் விடுதலையடைந்த சிம்பாப்வே (Zimbabwe) நாட்டிற்கும், அதன் விடுதலை வீரர்களுக்கும் அடித்தளமாக உறுதியாக இறுதி வரை இருந்தவை சாம்பியா, மாளாவி, மொசாம்பிக், டான்சானியா, போசுவானா (Zambia, Malawi, Mozambique, Tanzania, Botswana) போன்ற அண்டை நாடுகளும் அவற்றின் அரசுகளும் மக்களும்தாம். இவை முதல் அணி நாடுகளாக (Front Line States) சிம்பாப்வே நாட்டு விடுதலைப்போரில் விளங்கின. அதன் விடுதலைபற்றி இந்நாட்டு அரசுத் தலைவர்களுடன்தான் அடிக்கடி பேச்சு உரைகளை ஆங்கிலேயே மற்றும் பிற உலக வல்லரசுகள் நடத்தின. இந்த "முதலணி" நாடுகளின் உதவியால்தான் வெள்ளை நிறக் குடியிருப்பு (காலனி) ஆட்சியரசான இயான் சுமித்தின் சட்டத்திற்கெதிரான "தன் விருப்ப உரிமை அரசு" நீக்கப்பட்டுக் கறுப்பு இன மக்களரசும் உண்மை உரிமையும் சிம்பாப்வே மக்களுக்குக் கிடைத்தது. ஆப்பிரிக்கக் கறுப்பு நாடுகள் எல்லாம், தென் ஆப்பிரிக்காவிலும், நமீபியாவிலும் தம்மினத்தவர் விடுதலைக்காக "ஆப்பிரிக்க ஒற்றுமைக்கான அமைப்பு" (Organisation for African Unity) ஒன்றை ஏற்படுத்தி உலகில் மற்ற நாடுகளின், மற்ற இன மக்களின் ஆதரவையும் நாடுகின்றார்கள். இப்படிக் கறுப்பு இன மக்களிடையேயும் தம்மினத்தவரின் விடுதலைக்காக சலியாத உழைப்பு!

ஆப்பிரிக்காவில் அடிமைப்பட்ட தம்மின மக்களின் விடுதலைக்காக "ஆப்பிரிக்க ஒற்றுமை" அமைப்பு! மேற்காசியாவில் தம்மினப் பாலத்தீனிய விடுதலைக்காக 'அராப் லீக்'!

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில், அண்மையில் உள்ள நம்மின உடன்பிறப்புகளின்—ஈழத் தமிழர்களின் — உரிமை மண், உயிர் மண் "தமிழ் ஈழம்" மீட்கப்பட தமிழர்களிடையே என்ன ஒற்றுமை! என்ன ஈகம்! எடுத்துக் காட்டுக்கு, 6-12-82 "இந்து" பக்கம் 9-இலும் 7-12-82 மதுரை இந்தியன் எக்சுபிரசு பக்கம் 13-இலும் வந்துள்ள செய்தி ஒன்று போதுமே!

ஆம்! தமிழ் மறவன் நடிகர் திலகம் சிவாசிகணேசன் அவர்கள் இனவெறி வல்லாளுமைச் சிங்கள நாட்டின் தலைவர் செயவர்த்தனேவுடன் கை சேர்த்துத் தமிழ் ஈழம் நாட்டில் கிழக்குப் பட்டிக்கோலா என்ற ஊரில் தமிழர்களிடையே வன்முறை (அதாவது விடுதலை முயற்சிகள்) வேண்டாம் எனப் பேசி முழங்கினாராம்! ஈழத் தமிழினத்தின் உணர்வை அப்பா செயவர்த்தனே திசை திருப்ப முயல்கிறார் என்றால் அதில் வியப்பேதுமில்லை. அவரால் இன்று வரை தமிழ் ஈழ நாட்டு "விடுதலைப் புலிகளை" வெல்ல இயலவில்லை. "விடுதலைப் புலிகளுக்கு"ப் பக்கத் துணையாக இருக்கும் தமிழ் மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறார். அதற்குத் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தீவிற்குப் படப்பிடிப்புக்குச் சென்றுள்ள திரு. சிவாசி கணேசனையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். பகட்டுக்கும், விளம்பரத்திற்கும் ஆசைப்பட்டு நடிகர் திலகமும் தம் இன உணர்வை இழந்து தம்மின மக்களிடையே சிங்கள செயவர்த்தனேவுடன் சேர்ந்து விடுதலைக்கு எதிராக பேசியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் அரசியல் மரபிற்கு (Political Tradition) எதிராக நடந்து தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டுள்ளார். இந்நூற்றாண்டின் அரசியல் மரபு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் விழிப்புணர்வு பெற்று எழுச்சியுடன் விடுதலையை நாடுவதுதானே! இந்தியா உட்பட எங்கெங்கிலும் இருந்த அடிமை மக்களும் அவர்களின் நாடுகளும் உரிமை அடைந்தது இந்த நூற்றாண்டில் தானே!

ஈழத் தமிழினம் மட்டும், அவர்களின் தமிழ் ஈழம் நாடு மட்டும் ஏன் நெறி விலக்காக வேண்டும்? மான மறவன் சிவாசி கணேசன் எண்ணிப் பார்க்க வேண்டும். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியினர்க்கு" இந்தப் பரந்த உலகில் ஒரு விடுதலை நாடாவது இருக்கக் கூடாதா? அவர்கள் இந்தியராகவும், சிரிலங்கன்களாகவும் மட்டுமே இருந்தழிய சிவாசி விரும்புவதேன்? இமயவரம்பனையும், கங்கை கொண்டவனையும், கடாரம் வென்றவனையும் கொண்டிருந்த குடிக்கு, இன்று ஓர் உரிமை நாடமைவது ஏன் சிவாசிக்குப் பொறுக்கவில்லை? இராச இராசனை நடித்த தமிழ் மறவன் சிவாசியா தமிழ் ஈழ நாட்டில் பட்டிக்கோலாவில் செயவர்த்தனேவுடன் சேர்ந்து ஈழத் தமிழரின் விடுதலை உணர்வுகளையும், அவரின் விடுதலை முயற்சிகளையும் கண்டித்தது? தமிழன் சிவாசி இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்கிறாரா?

தமிழ் நாடெங்கும் உள்ள உணர்வுள்ள தமிழர்கள் நடிகர் திலகத்திற்குப் பணிவான அருவருப்போ அச்சுறுத்தலோ இல்லாத— கண்டன மடல்களை எழுதவேண்டும். 'தமிழ் நில'த்தில் நடிகர் திலகத்தின் முகவரியையும் தர வேண்டுகிறேன். வாழ்க தமிழினம்! வளர்க அவரின் விழிப்புணர்வும் எழுச்சியும்!

---

சிவாசி முகவரி: திரு. சிவாசி கணேசன்.
'அன்னை இல்லம்' 11, போக் சாலை,
தியாகராய நகர், சென்னை-17.

அழகும், பயனும் மிக்கது

வெளிவந்து விட்டது!

## தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

0 மிகச்சிறந்த முறையில், அழகிய நடைமுறை எண்களும், அவற்றுடன் தமிழ் மூல எண்களும், ஆங்கில மாதப் பக்கங்களும் கொடுக்கப்பெற்று. உலக, தமிழக அறிஞர்களின் பிறந்த நாள் மறைந்த நாள் விளக்கங்களுடன், பக்கத்திற்குப் பக்கம் ஏராளமான கருத்துரைகள் கொள்கை விளக்கப் பாடல்களுடன், பளிச்சிடும் அழகிய இருவண்ணத்தில், உயர்ந்த வெள்ளைத்தாளில், படஅச்சு (Off-set) முறையில், உருவாக்கப்பெற்ற **தமிழ் நாளிகை** விற்பனைக்கு அணியமாகி விட்டது.

0 வேண்டுதல் மடல்களும் பதிவுகளும் நாள்தோறும் வருகின்றன. எனவே தேவையானவர்கள் உடனே தேவையான நாள்காட்டிகளுக்குரிய முழுப்பணத்தையும் முன்னதாக விடுத்து விடவும்.

0 முழுத்தொகையும் முன்பணமாக வராத எவர்க்கும் நாளிகை அனுப்பப் பெற இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

0 மிகுந்த பொருள் முதலீட்டில், பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையில், தமிழ்நாளிகை, புதுமுறையில் வருவதால், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் எங்களுடன் இந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| தனி நாளிகை ஒன்று உயர்ந்த வெளியீடு: | 4-25 |
| தனி நாளிகை ஒன்று பொது வெளியீடு: | 4-00 |
| பதிவில்லா அஞ்சல் கட்டணம்: | 1-50 |
| குறிப்பஞ்சல் கட்டணம்: | 2-50 |

0 (குறிப்பஞ்சலிலன்றிப் பொதுவஞ்சலில் விடுத்துத் தவறிப்போனால் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது)

0 ஒரேதடவையில் 25 நாளிகைகளுக்கு மேல தருவிப்போர்க்குப் குறிப்பு அஞ்சல் செலவு இல்லையம்

0 விரைந்து வாங்கத் தவறுவோர் பின்னர் வருந்த வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.

0 100 நாளிகை வாங்கி விற்போருக்கு 10விழுக்காடு கழிவு கொடுக்கப்பெறும், அனுப்புச் செலவும் இல்லையம்.

0 வெளிநாட்டினர் நாளிகை ஒன்றுக்குக் கட்டுச் செலவு 2 உருபாவும், கப்பல் வழி விடுக்கும் அஞ்சல் செலவுக்கு உருபா 9 என்றும் நாளிகை ஒன்றின் விலையுடன் கூட்டி, அதற்குரிய தொகைக்கு **பிரிட்டிசு அஞ்சற் கட்டளை (British Postal - Order)** ஆக வாங்கி விடுக்கவும். கூடுதலான படிகளுக்கும், வானூர்தி வழி விடுக்கவும் எழுதிக் கேட்க

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

---

# தமிழினைப் பாடு !

புலவர். மு. சொக்கப்பன், க.மு., இல.இ.

தன்னேரில்லாத் தமிழினைப் பாடு
தழைத்திடும் தமிழ்க்குலம் தன்னுணர் வோடு !
முன்னைப் பெரும்புகழ் படைத்த தென்னாடு ! (தன்னே)

முத்தமிழ் வளத்தினால் செழித்த நன்னாடு!
தன்னைக் கொடுத்தும் தமிழினைக் காத்த
தகைசால் புரவலர் வாழ்ந்த பொன்னாடு! (தன்னே)

எங்கிருந்தோ,சிலர் இங்குவந் தமையால்,
எம்மொழி, நாடு ஏற்ற மிழந்தன !
இங்கினி மேலும் உறங்கிடல் நன்றோ ?
ஏறெடுத் தேறு ! ஏறுநீ ஏறே !

தமிழ்த்தாய் திருவடி தளைப்பட லாமோ! (தன்னே)
தமிழ்க்கொரு பகையெனில் தாழ்ந்திட லாமோ!
இமிழ்திரைப் பெருங்கடல் வறக்கினும் நம்மின்
எழுச்சிகொள் தமிழ்நெறி வீழ்ந்திட லாமோ?

இத்தமிழ் நிலமே எமதெனப் பாடு! (தன்னே)
எவரினி எதிர்ப்பினும் எதிர்த்துநீ சீறு!
முத்தமிழ் வளர்த்தலே முனைப்பெனக் கூறு!
மூச்செலாந் தமிழென முரசறைந் தாடு!

# வாழ்த்துகின்ற பாமலர்கள் !

நெஞ்சமெலாம் வெந்து நிலைகலங்கி நீருகித்
துஞ்சுகிற போழ்தத்துத் தோன்றினை நீ—அஞ்சாப்
புகழேய்திப் புன்மைக்கு வாளாகிப் பொல்லா
இகழ்நீக்கும் நல்லிதழாய் இன்று !

தமிழ்நிலமே ! வாழ வருக ! தளிர்ப்புத்
தமிழர்கட் கென்றென்றும் சார்வாய் — அமிழ்தாய்த்
தமிழ்நிலமே நீவந்தாய், வாழ்க தளரா(து)
இமிழ்வாய் உயர்வுறு கென்று !

— **மீ. தங்கவேலன்,** பட்டுக்கோட்டை.

ஒப்புயர் வேது மில்லா
உயர் தமிழ் நிலமே ! என்றும்
எப்புயல் வநத போதும்
இனம், மொழி நாளும் காத்தே
ஒப்புயர் வெய்தி நாட்டை
உணர்வுடன் விழிப்பே கொள்ளச்
செப்புவாய் வழிகள் ! மாந்தர்
சிறுமையை மாய்ப்பாய் வாழி !

— **ந. இளவழகன்,** மணப்பாறை.

கைவிரித்தே அண்ணாவும் காணாது விட்டகொள்கை
வையகத்தே நாட்டுதற்கு வந்தீரே !—
மெய்சிலிர்த்தேன் !
பாவல ரேறைய ! பைந்தமிழ் நாட்டுரிமை
யாவையும்மீட் போம்தலைநின் னேற்று !

— **க. இராயவேல்,** அறி. இ. சென்னை-21

அடிமை வலையில் அகப்பட்டு நாளும்
மடியும் குழுகாயம் மாற்றிக் — கடிதே
அமிழ்த நிலையை அளித்திட வந்த
தமிழ்நிலமே வாழீ த்ழைத்து !

கூட இருந்தே குழியில் தள்ளுவர்க்கு
மூட மலத்தையே மொய்ப்பவர்க்குப்—பாடல்
அமிழ்தால் உயிர்ப்பை அளிக்கவந்த ஈடில்
தமிழ்நிலமே வாழீ தழைத்து !

எலியினைக் கண்டால் புலியென எண்ணிக்
கிலியால் கெடுவோர் உளத்தில்—புலியும்
உமியென ஊதும் உரமேற்ற வந்த
தமிழ்நிலமே வாழீ தழைத்து!

— **வீ. வில்வநாதன்,** பெங்களூர்-16.

உலகணைத்த தமிழினத்தின் நலமனைத்தும் காக்கவே
உரிமைமிக்க படையணியாய் நடையனைத்தும்
காட்டவே
நிலவுகின்ற மடமையோடு மிடிமையெல்லாம் ஓட்டவே
நிலைத்தபுகழ் தமிழினந்தான் நிறைவுடனே காட்டவே
உலவுகின்ற விடுதலையின் ஒளிச்சுடராய் நாட்டிலே
உறங்குகின்ற தமிழினத்தின் செவிப்பறையைத்
தாக்கவே
உலகனைத்தும் உலவவந்த 'தமிழ்நிலம்' வெல்கவே !
உளவனைத்தும் உனக்கெனவே ஆக்கவந்தோம்
நாங்களே!

— **பேரா. கா. அரங்கச்செல்வன்,** க. மு.
கோபி செட்டிபாளையம்.

செந்'தமிழ் நிலமே'! நின்றன்
சீர்த்தியே எங்கள் வாழ்வாம்!
வெந்துய ருற்ற போழ்தும்
விழுப்புண்கள் ஏற்போம்! அஞ்சோம்!
எந்தமிழ் இனத்தைக் காக்கும்
எழுச்சியின் முரசம் ஆவாய்!
முந்தையர் புகழை மீட்பாய்!
மொழிநலன் இனிதே காப்பாய்!

—**'விடியல் விழும்பி'** கருவூர்.

இமிழ்கடல் சூழும் ஞாலத்
தெங்கணும் நிறைந்து வாழும்
தமிழரைத் தமிழைத் தாழ்த்தும்
தடைகளைத் தகர்த்துத் தள்ள
அமைந்தசம் மட்டி போலும்
அரசியல் கலைபண் பாட்டின்
தமிழ்நிலக் கிழமை யேடு
தளிர்த்திடக் கண்டேன் வாழ்க!

—**கார்முகில்,** இலாலாப்பேட்டை.

இழந்துவிட்ட மொழியுணர்வை இனத்தின் மாண்பை
எந்தமிழர் மீண்டிங்கே பெறுதல் வேண்டி
பழந்தமிழின் பாட்டாலே எழுத்தால் பேச்சால்
பகுத்தறிவைக் கலந்திங்கே வீர மோடு
முழங்கிவரும் பாவரசே! அறிஞ! நீங்கள்
முகிழ்த்திட்ட விளைநிலமாம் தமிழ்நிலத்தை
அழகாகப் போற்றியிங்கே காப்ப தற்கே
அணியமென என்ஞான்றும் சூளு ரைப்பேன்!

ஆலம்பாடி **வேல். இளங்கோ,** பெரம்பலூர்.

# தமிழக அரசியலிலே ஒரு திருப்பம் !

தேசிய ஒருமைப்பாட்டைப் பெரிதும் வற்புறுத்திய தலைவரின் வழி வந்த, தேசியத்தில் பெரும் நம்பிக்கை கொண்டவர்களான திரு. நெடுமாறனும், திரு. குமரி அனந்தனும் இன்று தில்லி வல்லாண்மையை மிகக் கடிந்துப் தமிழர் நலன்களுக்குக் குரல் கொடுத்தும் வருகின்றதைக் காண்கிறோம் ஏறத்தாழ நம் 'தென்மொழி'யின் கொள்கைகளை நாளும் பேசி வருகின்றனர்.

ஈழத்தமிழர் நிலைகளுக்குப் பேராதரவாகவும் அரும்பணிகளை அவர்களுக்காகவும் ஆற்றி வருகின்றனர். நடுவணரசு, தென்னாட்டில் பெரும் பெரும் தொழில் அமைப்புகளை அமைக்காது. நம்மை ஏமாற்றியதை வெளிப்படுத்தியும், கண்டித்தும் போராடியும் வருகின்றனர். காவிரி நீர்ச் சிக்கலில், நடுவண், மாநில அரசுகள் செய்யாத நல்ல முயற்சிகளைச் செய்து, நமது நிலைக்கு ஆதரவு உண்டாக்கும் ஆக்க வேலையினைச் செய்கின்றனர். பணவிடைத்தாள், வரைவோலை, காசோலை, வானொலி, தொலைக் காட்சி முதல்யன வற்றிலெல்லாம் இந்தியைப் புகுத்துவதை எதிர்த்தும், தமிழுக்கு இடமளிக்கச் செய்யும் முயற்சிகளைச் செய்தும் வருகிறார்கள். தமிழர்களின் அவலநிலைகளையும், ஆட்சியினரின் அடிமைத் தன்மையும் அலசியும், கண்டித்தும் எடுத்துக் கூறியும் வருகின்றனர்.

ஆக தமிழக, அரசியலிலே இப்படி ஒரு திருப்பமான போக்கைப் பார்க்கிறோம் ! பிரிவினையை முன் வைத்து, மொழி, இன, நாட்டின் நலன்களைக் காக்க என்று கூறி, ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லாம் அவற்றைத் துறந்து மறந்து தில்லிக்கு முழு அடிமை ஆனார்கள் ! ஆனால் ஒருமைப்பாடு பேசி, ஆட்சியை இழந்தவர்கள், உண்மையாக, உறுதியாகத் தேவையான முறைகளில் நம் தமிழ்நாட்டு நலம் பேண முயற்சி செய்கின்றனர்.

தமிழ் மக்கள் தங்கள் நலம் விரும்பிகளை அடையாளம் தெரிய வேண்டும். உண்மையான நாட்டுப் பற்றுள்ளவர்களைப் போற்ற வேண்டும். அவர்களின் நன்முயற்சிக்குத் துணை நிற்க வேண்டும். பாராட்டவும், துணை நிற்கவும் வேண்டும். நமது கொள்கைகளை யார் செயலாற்றினாலும் துணை நிற்போம். நம்மோடு சேர்ப்போம், தமிழர் நலம் காப்போம் !

**மா. ஆறுமுகம்**
பல்லடம்.

## அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள். — அமைச்சர்

# 'தமிழ் நிலம்' நிறைத்தி நன்கொடை !

'தமிழ் நிலம்' வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள் தாமே முன்வந்து நன்கொடை நல்கியுள்ளனர். அவர்களின் கடமையுணர்விற்கு அகங்னிறந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவ்வார்வலர் வரிசையில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுகிறோம்.

(29 - 11 - 82 முதல் 15 - 12 - 82 வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கோ. மு பெருமாள், | திருவல்லிபுத்தூர் | 7 | 40 |
| 2. | கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், | மின்பாறை | 10 | 00 |
| 3. | க. சுப்பையா | " | 5 | 00 |
| 4. | மா. வி. இராசு | " | 5 | 00 |
| 5. | அரங்க. செயராமன் | " | 5 | 00 |
| 6, | வே. துரைராசு | " | 5 | 00 |
| 7. | க. இராமன் | " | 5 | 00 |
| 8. | சீ. கோபாலகிருட்டிணன் | " | 1 | 00 |
| 9. | ஒடவை. ந. தமிழ்வேந்தன் | ஒட்டன்சத்திரம் | 5 | 00 |
| 10. | வே. அரங்கசாமி | காங்கயம் | 10 | 00 |
| 11. | க. உலோகநாதன் | " | 10 | 00 |
| 12. | நா. இராமசாமி | " | 10 | 00 |
| 13. | ம. நடராசன் | " | 10 | 00 |
| 14. | பேரா. கா. அரங்கசாமி | கோபி | 50 | 00 |
| 15; | நட. தம்பித்துரை | திண்டுக்கல் | 5 | 00 |
| 16. | அ. தங்கராசன் | ஈப்போ, மலேசியா | 130 | 00 |
| 17. | செ முருகாண்டி | " " | 130 | 00 |
| 18. | க. பிச்சை | " " | 130 | 00 |
| 19. | ஒ. ம. தங்கவேலு | " " | 45 | 00 |
| 20 | கி. நாகசாமி | " " | 45 | 00 |
| 21. | செ. சுப்பையா | " " | 20 | 00 |
| 22. | மு. நடராசன் | கோலார் தங்கவயல், கருநாடகம் | 70 | 00 |

# இளையராசாவின் ஏமாளித்தனம் !

பார்ப்பனீயத்தை வளர்ப்பதற்கு இன்னும் இந்த அடிமைத் தமிழர்கள் எருவாகவும் நீராகவும் இருக்கின்றார்களே! அண்மையில் திரை இசையியக்குநர் திரு. இளையராசா அவர்கள் திருவரங்கம் கோவில் இராசகோபுரம் கட்டுவதற்கு! எட்டு இலக்க உருபா நன்கொடையாக அளிக்க ஒப்புதல் தந்துள்ளார் என்றும், அதில் முதல் கட்டமாக உருபா ஓர் இலக்கத்திற்கான காசோலையை அமைச்சர் திரு. இராம. வீரப்பனிடம் முன் பணமாக அளித்தார் என்றும் செய்தி வந்தது. நான் அவாள் நாளேடான இந்தியன் எக்சுபிரசில் படித்தேன். மேலும் அவாளின் திங்கள் வெளியீடான சாவி இதழில் அந்நிகழ்ச்சியினைப் படம் போட்டு வெளியிட்டு மறுபக்கத்தில் அவரைப்பற்றி இழிவாக எழுதியிருந்தது. என்னதான் அவர்கள் வளர்ச்சிக்கு இந்தப் பார்ப்பன அடிமைகள் திரியாக, நெய்யாக அமைந்தாலும், அவாள் முன்தங்கிய சாதியார் என்று கருதப்படும் ஓரிரண்டு இனத்தவர்களை மட்டுமே பாராட்டுவார்களே அல்லாமல் இந்தப் பச்சைத் தமிழனையா பாராட்டுவார்கள்?

கடவுளின் கருவறைக்குள் நுழைந்தால் தீட்டுப்பட்டு விட்டது என்று தீட்டுக்கழிக்கும அவாள் இனக்குஞ்சு குவளூான்கள், உண்டு கொழுக்க உதவியாக அமையும் இந்தக் கோவில்களுக்கு வாரி இறைக்கப்படும். இந்தப் பெரும் பணத்தை அவர் பிறந்த மண்ணில், இன்னும் வானமே கூரையாகவும், தரையே பாயாகவும் மண்ணில் புரளும் மக்கட்காக, கொளுத்தும் வெயிலெல்லாம் எங்கள் மேனியில், கொட்டும் மழையெல்லாம் எங்கள் உடம்பில் என்று ஒட்டி உலர்ந்த வயிறும் ஒருசாண் உடம்புமாக வாடி வதங்கிப் பஞ்சடைந்த கண்ணுமாக இருக்கும் அந்தத் தமிழ் மக்கட்கு இருக்க வீடோ அன்றிப் பிழைக்கச் சிறு தொழிற்கூடமோ அமைத்துக் கொடுத்தால் எத்தனை நெஞ்சங்கள் அவரை வாயார வாழ்த்தும்.

பணம் கூடிவிட்டால் அவாளின் பாசறையில் ஒன்றி அவாளின் பாதந்தாங்குவதில்தான் இந்த ஏதுங்கெட்ட தமிழ் அடிமைகள் இன்பம் காண்கிறதுகள். அச்செய்தியைப் படிக்கும்போது ஐயாவின்,

'உருப்படியாகாதடா தமிழகம் உருப்படியாகாதடா' என்ற பாடல் தான் நினைவிற்கு வந்தது.

- **மெய். அருண்மொழியன்,** கடல் மீன் வளம்.

# சிறப்பு மடல்

## அயலகத்திலிருந்து ஒரு குரல்!

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்!

தமிழரின் இன ஒற்றுமைக்கும் அவர்தம் மொழி உரிமைக்கும் அயராது பாடுபட்டு வரும் "தென் மொழி" போன்று, தமிழ நிலமும் தன் செம்மாந்த நடையில், சோம்பித் திரியும் நந்தமிழர்களை ஒன்று திரட்டி, இவ்வுலகியல் வாழ்வோடு நம்மையும் பிணைத்துக் கொண்டு மொழி, இன, அரசியல், கலை, பண்பாடு, அறிவியல் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குவதற்குத் "தமிழ் நிலம்" முன்மாதிரியாக ஆகுதல் வேண்டும்.

இவ்வுலகில் வரலாறு அறியாத எத்தனையோ சின்னஞ் சிறு நாடுகளெல்லாம் இன்றைய உலக அரங்கில் கொடி கட்டிப் பறக்கின்றன. அந்தந்த நாடுகளில் வாழும் மாந்தர்கள் மொழி, இன உணர்வும், பண்பாடும், அறிவியலும் மேலோங்க விளங்குவது மட்டுமின்றி, மாந்தக் கூட்டுறவிலும் ஒற்றுமையாகத் திகழ்கின்றனர். ஆயினும், வரலாறும் தொல்புகழுமிக்க நந்தமிழர்களோ மொழி, இன உணர்வின்றிப், பண்பாடு குலைந்து, சோம்பியும் மயங்கியும் திரிந்து, பல்வேறு சாதிகளாலும், அரசியல் கட்சிகளாலும் பிரிக்கப்பட்டு, ஆளும் உரிமையற்றுத், தம் சொந்த நாட்டில் பிழைக்க வழியற்றுப், பிறநாடுகளிற் குடியேறி வாழ்ந்தும் தாழ்ந்தும் காணப்படுகின்றனர். இவ்வாறாகத் தமிழர்களின் அவலநிலையைக் காணும்போது நாமும் செயலிழந்து விடுகின்றோம்.

நம் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக இருப்பது இங்குள்ள அரசியல் கட்சிகள்தாம். அவற்றால் நாம் எந்த நன்மைகளையும் அடைந்துவிடப் போவதில்லை. மொழி, இன உரிமை, அல்லது ஒற்றுமை என்பதெல்லாம் தாம் பேசுகின்ற பொதுமேடையோடு சரி. தம் வாழ்வில் பொது நிலை பற்றி அக்கறைப்படுவதுமில்லை. அவர்களுக்கு வேண்டுவதெல்லாம் பதவி நலமும் பணச் சுரண்டலுந் தாம். நம்நாட்டு அரசியல்காரர்களை நல்வழிப் பாதையில் எத்தனை அறிஞர்களாலும் மாற்றிவிட முடியாது. எனவே நம் இனம் யாவும் ஒற்றுமையும் உயர்வும், உரிமையும் காண வேண்டுமெனின், சாதிகளும் அரசியல் கட்சிகளும் ஒழிய வேண்டும். கட்சிகளாலும், சாதிகளாலும் பிரிக்கப்பட்ட நாம், நம் மொழி பற்றியோ இன ஒற்றுமை பற்றியோ சிந்தித்திருந்தால், நாமும் உலகத்தாரோடு ஒன்றி உயர்ந்த வாழ்க்கையும், மேம்பாடும் அடையலாம். இல்லெனின் தாழ்வுறுவது உறுதியே!

தமிழினக் குமுகாயம் உருப்படுவதற்கும், இழந்த உரிமையை மீட்பதற்கும் தமிழினம் ஒன்றுபட வேண்டும். அவ்வாறு தமிழினம் ஒன்றுபடுவதற்குத் 'தமிழ் நிலம்' போன்ற தாளிகைகள் இனவெழுச்சியும் மொழியுணர்வும் ஊட்டக்கூடிய கட்டுரைகளைத் தமிழ் நிலத்தில் அவ்வப்பொழுதில் வெளியிட்டு வர வேண்டும். நம் ஆசிரியர் இதைக் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். வெல்க தமிழ்! தழைக்கட்டும் தமிழ்நிலம்! அன்புடன்,

அ. தங்கராசன், சப்போ, மலேசியா.

## காடம்பாறையில் பெரியார் பிறந்த நாளும் பகுத்தறிவாளர் கழகத் தொடக்கமும்

மின்பாறை, 11-12-82:- இதனருகிலுள்ள காடம்பாறை மின் நிலைய இருப்பில் இன்று தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழாவும், பகுத்தறிவாளர் கழகத் தொடக்க விழாவும் மிகவும் சிறப்பான முறையிலே கொண்டாடப்பட்டன. திரு. தி. தி. குருமூர்த்தி தலைமையேற்றார். திரு. சோ. கலைமுத்து அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திருவாட்டி. புலவர் கண்மணி தமிழரசன், க. இலக். அவர்கள் கொடியேற்றி வைத்துப் பேருரையாற்றினார்கள் தொன்மப் புளுகுகளையும், மூடநம்பிக்கைகளையும், பருவகாலச் சாமி ஐயப்பன் தோற்றம், வழிபாட்டு முறை அருவருப்புகளையும், பார்ப்பனரின் அடாவடித்தனத்தையும் இவற்றைத் தவிடு பொடியாக்கத் தந்தை பெரியாரவர்கள் மேற்கொண்ட பணிகளையும் மிக விளக்கமாகவும், நயமாகவும் எடுத்துக் கூறினார்கள் மேலும் கோவை மாவட்டத் தி.க செயலர் திரு. தி. வெங்கடேசன், திரு. எ. எசு. கானே, திரு. அழகிரிசாமி ஆகியோரும் பேசினார்கள் இதில் கோவை மாவட்ட உ த மு கழகச் செயலர் திரு. கி. இளஞ்சேரல் முதுபாண்டியன் கலந்து கொண்டார் தந்தை பெரியாரவர்களின் தமிழின முன்னேற்றத்திற்காற்றிய தொண்டுகளை நினைவு கூர்ந்து இன்று பார்ப்பனர் போடும் ஆட்டங்களையும், தமிழின மக்கள் கருநாடகத்திலும், அந்தமானிலும், ஈழத்திலும் படுந்துயரங்களையும், எடுத்துக்கூறி அவை தீர்க்கப் பாடுபடவேண்டும் என்றும் உ த.மு.கழகம் எந்தவொரு திரவிட இயக்கத்துக்கும் மாறுபட்டதன்று என்றும் பெரியார் என்னும் ஆல மரத்திற் கிளைத்த மரங்களிலொன்றான தமிழின (திரவிட) இயக்கமே என்றும் இதன் முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஈரோட்டில் மனுதரும எரிப்பிற் கலந்துகொண்டு சிறைப்பட்டவர் என்றும். இவ்வியக்கம் திராவிடக் கழகத்தினதும், பகுத்தறிவாளர் கழகத்தினதுமான அனைத்து மொழி, இன நாட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் தோளோடு தோள் நின்று உழைக்க அணியமாயுள்ளதென்றும் குறிப்பிட்டார். திரு. நா. பெரியசாமி அவர்கள் நன்றி நவிலக் கூட்டம் இரவு 10-30 மணிக்கு இனிதே நிறைவுற்றது.

செய்தி: கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்.

## "சுதந்திரன்" இதழுக்கு இலங்கையில் மீண்டும் தடை!

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உரிமைக்குரலாகவும், சிறிலங்கா அடக்குமுறை வன்கவர்வு (ஆக்கிரமிப்பு) ஆட்சியின் கீழ் அல்லல் படும் மக்களின் செய்திகள் வெளியிடும் ஏடாகவும் 'கிழமை இருமுறை யாகவும் வெளிவரும் 'சுதந்திரன்' செய்தி இதழ இலங்கையில் மீண்டும் தடை செய்யப் பட்டுள்ளது கடந்த அகடோபரில் நடைபெற்ற இலங்கை அதிபர் தேர்தலின்போது இவ்வாண்டு முதல் தடவையாகத் தடை செய்யப்பட்ட 'சுதந்திரன்' ஏற்கனவே பல தடவைகள் அடக்குமுறை ஆட்சியால் பல இடையூறுகளையும் பெற்றுள்ளது. இப்போது இம்மாதம் 22-ஆம் நாள் இலங்கையில் 'சயவர்த்தன' ஆட்சியை 6 ஆண்டுகள் மேலும் நீடிக்கக் கோரும் தீர்மானத்தின் பெயரில் பொதுமக்கள் கருத்தறியும் கருத்தெடுப்பு நடப்பதினால் மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது.

சயவர்த்தனாவின் வன்கவர்பு அடக்குமுறை ஆட்சியை மேலும் நீடிக்கும்படி தமிழ் மக்கள் நடந்துகொள்ளக் கூடாதெனவும் வல்லதிகார முறையிலே ஆட்சி செல்வதாகவும், இவ்விதழ் தெரிவித்திருந்தது. தமிழ் மக்களும் சயவர்த்தனாவின் ஆட்சியை எவ்வாறு விழுத்தலாமெனவே சிந்தித்து வண்ணமுள்ளனர். 1977-ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே தமிழீழக் கோரிக்கையை முன் வைத்து வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும் இத்தேர்தலில் தமிழ் மக்களைக் கலந்து கொள்ள வேண்டாம் எனக் கேட்டுள்ளது. இது தமிழர்களுக்கு நல்லதாகப்படவில்லை. இதனால் செயவர்த்தன ஆட்சிக்குத் தான் வலிவேற்படும்

- நம் இலங்கைச் செய்தியாளர்

## அடுத்த இதழ்...!

ஆசிரியரின் பவானி, திருக்குறள் தொடர் சொற்பொழிவு காரணமாக, அடுத்த "தமிழ் நிலம்" 9-1-83 அன்று வெளிவரும். அன்பர்கள் பொறுத்துக் கொள்க

—அமைச்சர்.

## தமிழினத்தின் தன்மான அணுக்கள் இறந்து விட்டன!

பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு வணக்கம். தாங்கள் கொண்டுள்ள 'தமிழின மீட்சி'க் கொள்கைக்காக இரவு பகல் பாராது அயராது உழைக்கின்றீர்கள் பொருளைப் பெரிதாக கருதவில்லை! குடும்ப நலனை மனத்தில் நினைக்கவில்லை. இந்தத் தாழ்ந்த தமிழினத்தையே நாளும் நினைத்து நெஞ்சு நோகும்படி உழைக்கின்றீர்கள். ஓர் ஆண்டு, ஐந்து ஆண்டன்று; 25 ஆண்டுகளாக என்ன முன்னேற்றம் கண்டீர்கள்? இந்தத் தமிழினத்தின் குருதியில் தன்மானத்திற்கான அணுக்கள் இறந்து விட்டன. தமிழன் என்ற உணர்வு அற்றுப்போய் விட்டது. இனி மேலும் இந்த இனம் உயர வழி இருப்பதாகத் தோன்றவில்லை. மேலும் தாங்கள் கூறியது போல் அடிப்படை அறிவே இல்லை அஃது இல்லாதபோது இவர்கள் எப்பொழுது சிந்திப்பது? பகுத்தறிவு பெறுவது? எல்லாரும் திரைப்படம் (சினிமா) எனும் பேயால் பிடிக்கப் பெற்றுள்ளனர். அறம் இல்லை. யாரைக் கேட்டாலும் நமக்கென்ன என்கிறார்கள். மெத்த கற்ற கூட்டமும் இப்படித்தான் இருக்கிறது.

சிற்றூர்ப்புற மக்களாவது எளிமை, வெகுளித்தன்மை கொண்டுள்ளனரா என்றால் இல்லை! அவர்களும் காரறிவு, புன்னெஞ்சம், களவு கொண்டொழுகுகின்றனர். அகத் தூய்மையும் புறத்தூய்மையும் இல்லை. கள், சாராயம், புகை, காமம் கரைபுரண்டோடுகிறது.

இலவயமாகச் சார மருந்துகள் (டானிக் போன்றவை) கொடுத்தால், அதன் பிறகு வேறு ஏதாவது கோளாறு வந்தால்கூட, 'டானிக்கை' குறை கூறுகிறான். உடலில் சிறு கொப்புளம் கண்டாலும், 'அம்மை நோய் மருத்துவரிடம் காட்டினால் அதிகமாகி விடும் என்கிறான். காய்ச்சல் வந்தால், பேய் மிரட்டியது என்கிறான். வலிப்பு வந்தால் 'காற்றுச் சேட்டை' என்கிறான். எவ்வளவுதான் மருத்துவராகிய நாங்கள் அறிவு புகட்டினாலும் மறுத்துப் பேசுகிறானே ஒழிய, ஏற்றுக் கொள்வதே இல்லை. இந்த நிலையிலுள்ள சிற்றூர் மக்களிடம் தமிழ், தமிழ்நாடு, தமிழ் இனம், திரவிட இனம், தமிழ்நாட்டு விடுதலை இயக்கம் இவற்றையெல்லாம் எப்படிப் பரப்புவது? இதற்கெல்லாம் வழி செய்ய இயலுமா? வாழ்க உங்கள் தந்நலமற்ற தொண்டு!

அன்பன், மருத்துவர். அ. விசுவநாதன்
சின்னசேலம் மரு. இ., அறு. இ.

## உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரு. 36/-
அரையாண்டு கட்டணம் ரு. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர் 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.